# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 08 அதிர்வு 90 மார்கழி 2024 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

















ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank
UNION BANK
Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# மரபை அழிக்கும் புதிய தெய்வங்கள்

● ஜெரா

தமிழர்களின் வாழ்வியலுக்கும் வீதிகளுக்கும் மிக நெருக்கமான தொடர்புண்டு. இன்று காப்பெற் செப்பனிடப்பட்டிருக்கும் இந்தத் தெருக்களுக்கும் தமிழர்களுக்கும் அதிக கதைகள் உண்டு. வரலாற்றையே மாற்றியமைக்கும் நினைவுகளுண்டு. உதாரணத்திற்கு யாழ்ப்பாணம் முழுவதும் அழிவுண்டு கிடக்கும் சுமைதாங்கிக் கற்கள் கனதிமிகு பண்பாட்டுச் செய்தியொன்றை தாங்கி வைத்திருக்கின்றன. வட பகுதியில் பெருந்தெருக்கள் அமைக்கப்படாத காலத்தில் மக்கள் கால்நடையாகவும், மாட்டு வண்டில்களிலுமே தூர இடங்களைக் கடக்க வேண்டியேற்பட்டது. குறிப்பாகத் தலையிலும், தோளிலும் சுமைகளைச் சுமந்துவருபவர்கள் (வியாபாரிகளாக இருக்கலாம்) அந்தச் சுமைகளை இறக்கி வைத்தால், அதனை மீளவும் தூக்கித் தலையில் வைத்து உதவுவதற்கு ஆட்கள் இருப்பதில்லை. எனவே இந்தக் குறையை உணர்ந்த அன்றைய தமிழர்கள், ஏதோ ஒரு நேர்த்திக்கடனின் அடிப்படையில் மக்கள் பயணிக்கும் வீதிகளிலும், இளைப்பாறும் மரங்களின் கீழும் சுமைதாங்கிக் கற்களை நிறுவினர். மனிதனொருவனின் இடுப்பளவு உயரத்திலிருந்து, தோள் அளவு உயரம் வரை அமைக்கப்பட்ட இந்த சுமைதாங்கிக் கற்கள் பயணிகளுக்குப் பேருதவியாக இருந்தன. யாரின் உதவியுமில்லாமல் சுமைகளை இறக்கிவைக்கவும், மீளவும் தலையிலோ தோளிலோ சுயமாக ஏற்றிச் சுமந்து செல்லவும் இந்தச் சுமைதாங்கிக் கற்கள் பயன்பட்டன. இதன்மூலம் தற்போது வயல்களிலும், மக்கள் வாழாத இடங்களிலும் காணப்படும் இந்தச் சுமைதாங்கிக் கற்கள் ஒரு காலத்தில் பெருந்தெருக்களாக இருந்தன என்கிற வரலாற்றுச் செய்தியும் புலப்படுகிறதல்லவா? தமிழர்களின் புராதன தலைவழிப் பாதையின் வரைபடமும், அந்தத் தரைவழிப்பாதை இணைத்த நகரங்களின் பெயர்வரிசையும் கிடைக்கிறதல்லவா? ஆகவே சுமைதாங்கிக் கற்களாக “சும்மா” நிற்கும் அந்தக் கற்களிடம் இவ்வளவு பெரிய வரலாற்றுச் செய்தியுண்டு.

இதுபோல, நம் தெருக்கள் சார்ந்த இன்னொரு வரலாற்றுக் குறிப்பையும் இவ்விடத்தில் பதிவுசெய்யலாம். தமிழர் தாயகப் பகுதியைக் குறுக்கறுத்துச் செல்லும் பெருந்தெருக்களின் தொடக்கத்திலும், முடிவிலும், இடையிலும் பிள்ளையார், ஐயனார், வைரவர் ஆலயங்கள் இருப்பதை அவதானித்திருப்பீர்கள். இதனைப் படிக்கும் உங்களுக்கு ஏ9 வீதியில் உள்ள முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் நினைவுக்கு வந்திருக்கும். அதேபோல ஈரப்பெரியகுளம் பிள்ளையார் கோயில், வல்லைவெளி முனியப்பர் கோயில், கைதடிப்பிள்ளையார் கோயில், ஒட்டுசுட்டான் வீதியின் ஐயனார் கோயில், நெடுங்கேணி வீதியின் நொச்சியடி ஐயனார் கோயில், அக்கராயன் வீதியின் ஐயங்கன்குள ஐயனார் கோயில் போன்றவையும் நினைவுக்கு வந்திருக்கலாம்.

இந்த வீதிகளின் தொடக்கத்திலும், முடிவிலும், இடைநடுவிலும் இருக்கின்ற ஆலயங்களில் இறங்கிவழிபட்டிருப்போம். தேங்காய் உடைத்திருப்போம். காணிக்கையை உண்டியலில் இட்டிருப்போம். கச்சான் வாங்கி உண்டிருப்போம். ஆனால் இந்த தெருவோர ஆலயங்கள் எப்படி உருவாகின? ஏன் உருவாகின என்கிற விடயங்கள் குறித்து என்றாவது யோசித்திருக்கிறோமா?

புராதன காலங்களில் மக்கள் தம் பயணங்களை கால்நடையாகவும், மாட்டு வண்டில்களிலுமே மேற்கொண்டனர். எனவே ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்வதற்கு ஒரு நாளும் எடுக்கும், ஒரு வாரமும் எடுக்கும். தற்காலம் போல வீதிகளில் பெருந்திரளான மக்கள் சென்று வரவும் வாய்ப்பில்லை. எனவே தனியாகவும், குழுவாகவுமே வீதிகளில் பயணம் செய்யவேண்டிய சூழல் இருந்தது. இந்நிலையில் பயணத்தைத் தொடர்பவர்களை இடைநடுவே யானை, புலி உள்ளிட்ட காட்டு விலங்குகள் தாக்கக்கூடும். கொள்ளையர்கள் தம் கைவரிசையைக் காட்டக்கூடும். எனவே பயணத்தை ஆரம்பிப்பவர்கள், அதன் தொடக்கத்திலேயே தாம் நம்புகின்ற ஓர் தெய்வத்திற்கு ஆலயம் அமைத்து வழிபட்டுச் சென்றனர். இவ்வாறு வழிபட்டுச் சென்றால் தம் பயணத்திற்கு எவ்வித விக்கினங்களும் நேராது என்பது அவர்களின் நம்பிக்கையாக இருந்தது. அதுபோல பயணத்தின் முடிவிடமாக அல்லது கிராமங்களின் தொடக்க இடமாக இருக்கின்ற பகுதியிலும் வழித்தெய்வக் கோயில்கள் அமைந்திருந்தன. அவ்விடத்தில் நின்று, களைப்பாறி தம் பயணம் முழுவதையும் பாதுகாத்துத் தந்தமைக்கு நன்றி சொல்லி செல்லும் பழக்கத்தையும் புராதனர்கள் கொண்டிருந்தனர். தெருக்களின் இடைநடுவில் கோயில் அமைக்கப்பட்டமைக்கும் காரணம் இருந்தது. சிலவேளைகளில் வீதியின் இடைநடுவில் பயணித்துக் கொண்டிருக்கும்போது இரவுப்பொழுது ஏற்பட்டுவிடும். அவ்வேளைகளில் அந்தக் கோயிலில் தங்கிநிற்பர். தீவிரை எனப்படும் காட்டு விறகுகளால் ஆன அடுப்பினை செய்து அந்த வெளிச்சத்தில் மிருகங்களின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வர். இப்படியானதொரு வாழ்வியல் தேவையின் பின்னணியிலேயே வீதியோரத்தில் கோயில்கள் அமைக்கப்பட்டன.



> **ஈழத்தில் எங்கெல்லாம் மரபார்ந்த வழிபாட்டு இடங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்தியாவிலிருந்து வியாபார நோக்கில் கடைவிரித்திருக்கின்ற புதிய தெய்வஅவதாரங்களுக்கான கோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நல்லூருக்குப் போட்டியாகக் கூட, நல்லூர் கோயிலுக்கு அருகிலேயே சாயிபாபா கோயிலொன்று அமைக்கப்பட்டுள்ளது. சில நாட்களில் அவ்வீதியால் செல்லமுடியாதளவுக்கு சாயிபாபா பக்தர்களினால் கோயில் சூழல் நிரம்பி வழியும்.**

ஆனால் இன்று அந்தக் கோயில்கள் எல்லாமே வட இந்திய - ஆகம வழிபட்ட தெய்வங்களின் ஆலயங்களாக மாறிவருகின்றன. தன் இன வரலாறு தொடர்பிலும், பண்பாடு தொடர்பிலும் சரியான புரிதலற்ற மக்கள் கூட்டமொன்றின் தவறான நடவடிக்கைகளால் இந்தப் பண்பாட்டுப் பெருங்கூடங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

உதாரணத்திற்கு, ஐயனார் கோயில் அமைந்திருந்த படியால் ஐயங்கன்குளம் எனப் பெயர் பெற்ற அக்கராயன் ஐயனார் கோயில் இன்று வன்னியில் மிகப் பிரமாண்டமான ஐயப்பன் ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்களின் வழிபாட்டு மரபுகளுக்கும் ஐயப்பனுக்கும் என்ன தொடர்பு? எதுவுமில்லை. இந்நிலையில் இந்தியா சென்று வரும் பக்த கோடிகள் தமக்கு இயைபானதொரு கோயிலாக, மரபார்ந்த ஐயனார் ஆலயத்தை மாற்றியிருக்கின்றனர். இதுவொரு பண்பாட்டுச் சிதைப்பு. இந்தியாவில் உள்ள ஐயப்பன் சுவாமிக்கு பக்தர்களைத் திரட்டுவதற்காக ஈழத்தமிழர் வழிபாட்டு மரபொன்று சிதைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஒட்டுசுட்டானுக்குச் செல்லும் காட்டுப் பாதையின் ஆரம்பப் பகுதியில் தொன்மைக்கால ஐயனார் கோயிலொன்றிருந்தது. இறுதிப் போர் காலத்தின்போது அந்தக் கோயில் முன்னரங்க நிலைகளில் அகப்பட்ட போதும் பெரியளவில் அழிவுகள் ஏற்படவில்லை. மீள்குடியேற்றத்தின் பின்னரும் சில வருடங்கள் அது ஐயனார் கோயிலாகவே வழிபடப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அந்த ஐயனார் ஆலயம்கூட ஐயப்ப சுவாமி ஆலயமாக மாற்றப்பட்டிருக்கின்றது.

மாங்குளம் சந்தியிலிருந்து மல்லாவி நோக்கி செல்லும் காட்டு வீதியின் தொடக்கத்தில் ஒரு பிள்ளையார் கோயில் அமைந்திருந்தது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அந்தப் பிள்ளையார் கோயில் பிரமாண்டமான சாயிபாபா கோயிலாக மாற்றப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் வல்லைவெளி ஆரம்பிக்கின்ற இடத்தில் பழைமையானதொரு முனியப்பர் கோயில் இருந்தது. வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் அனைவரும் அவ்விடத்தில் இறங்கி, வழிபட்டு விட்டே தம் பயணத்தை ஆரம்பிக்கும் மரபார்ந்த பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வந்தது. ஆனால் தற்போது அவ்விடத்தில்கூட பிரமாண்டமானதொரு அனுமார் கோயிலும், சாய்பாபா ஆலயமும் கட்டப்பட்டுள்ளன.

இப்படியாக ஈழத்தில் எங்கெல்லாம் மரபார்ந்த வழிபாட்டு இடங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்தியாவிலிருந்து வியாபார நோக்கில் கடைவிரித்திருக்கின்ற புதிய தெய்வ அவதாரங்களுக்கான கோயில்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நல்லூருக்குப் போட்டியாகக் கூட, நல்லூர் கோயிலுக்கு அருகிலேயே சாயிபாபா கோயிலொன்று அமைக்கப்பட்டுள்ளது. சில நாட்களில் அவ்வீதியால் செல்லமுடியாதளவுக்கு சாயிபாபா பக்தர்களினால் கோயில் சூழல் நிரம்பி வழியும். தொன்ம வரலாற்றையும், மரபார்ந்த சுதேசிய வழிபாட்டு முறைகளையும் கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்கள், இன்று அதனையெல்லாம் பின்தொடராமல் கைவிட்டு இந்திய பண்பாட்டு ஆதிக்கத்தினுள் அள்ளுண்டு செல்வதையே மேற்படி கோயில்களின் மாற்றங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஒரு பண்பாட்டு மோகம்போல மாறிவரும் இந்தப் பண்பாட்டுச் சிதைப்பை முன்னின்று செய்வது யார்? இதற்கான பணம் எங்கிருந்து வருகின்றது? என்பதெல்லாம் யாருக்கும் தெரியாத ரகசியமாகவே இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. ■


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets
community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல்:08 அதிர்வு: 90 மார்கழி 2024 தொ.பே:1800 960162

## இனவாதமற்ற இலங்கையும் கோமாளிகள் அற்ற தமிழர் அரசியலும்

வெள்ளையர்களிடமிருந்து சுதந்திரம் கிடைக்கும் தருவாயில்கூட தென்னாசியாவில் இலங்கையின் பொருளாதாரம் வலுவாகவே இருந்தது. கடல் வளம், மண்வளம், நீர்வளம், இயற்கை வளம், பூகோள அமைவிடம் என எல்லாம் இருந்தும் முன்னோக்கி செல்லாமல், இலங்கை ஏன் வங்குரோத்து நிலைக்கு சென்றது என்பதற்கான காரணங்களில் “இனவாதம்” என்பது பிரதானமாகும்.

இந்த இனவாதத்தால்தான் ஸ்ரீ கலவரம், ஆடிக்கலவரம் என சிறுபான்மையின மக்களுக்கு எதிராக அதிகார வர்க்கங்களால் அவ்வப்போது கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

தமிழர்களின் பொற்கிஷம் எனக் கருதப்படுகின்ற யாழ். நூலகம் கூட தீ வைத்து எரிக்கப்பட்டது. கண்டி திகன கலவரம், அளுத்கம கலவரம் என்பனகூட இனவாதிகளால் அரங்கேற்றப்பட்டவைதான். இலங்கையில் உள்நாட்டு போர் மூள்வதற்குகூட இன ரீதியிலான அடக்குமுறையே பிரதான காரணம் என்பது கசப்பான உண்மையாகும்.

இலங்கையில் இனி இனவாதத்துக்கு இடமில்லை, புதிய சட்டங்களை கொண்டுவந்தேனும் இனவாதம் முற்றாக ஒடுக்கப்படும் என ஆட்சியாளர்கள் அறிவித்துள்ள பின்னணியில் எதற்காக தற்போது இனவாதம் பற்றி எழுதப்படுகின்றது என சிந்திக்கின்றீர்களா?

இலங்கை தீவில் இருந்து இனவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும், இந்த விடயத்தில் அரசாங்கம் உறுதியான கொள்கையில் இருப்பது வரவேற்ககூடிய விடயமாகும். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில்கூட இனவாதமற்ற நாடு என்ற விடயத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை வரவேற்ககூடிய விடயமாகும்.

இலங்கையில் அரசியல் ரீதியில் வங்குரோத்து அடையும் தரப்புகள் தாம் மீண்டெழுவதற்கு இனவாதம் என்ற ஆயுதத்தை பயன்படுத்திவந்த கசப்பான வரலாறும் இலங்கையில் உள்ளது. தற்போதுகூட அதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. எனவே, இதற்கும் ஆட்சியாளர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அதேபோல இலங்கையில் இதுவரைகாலமும் அடக்கி ஆளப்பட்ட தரப்புகள் தமது இனத்துக்குரிய உரிமைகள் பற்றி பேசுவதும், இன ஆக்கிரமிப்புக்கு எதிராக குரல் கொடுப்பதும் இனவாதம் அல்ல என்பதையும், அத்தகைய பிரச்சினைகளுக்கும் இனவாதத்துக்கு அடிபணியாமல் தீர்வை வழங்கினால்தான் அரசாங்கத்தால் இலக்கை நோக்கி பயணிக்க முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் இராஜதந்திர வியூகம் ஊடாகவே தாம் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வை வென்றெடுக்க வேண்டும். அதற்கு ஏதுவான சூழல் தென்னிலங்கையில் உருவாகியுள்ளது. ஆனால் அர்ச்சுனா போன்ற அரசியல் கோமாளிகளால் தென்னிலங்கை மீண்டும் இனவாதத்தை நோக்கி நகரக்கூடிய அபாயமும் உள்ளது. அர்சுனாவின் போலித் தமிழினப்பற்று அடங்கிப்போயிருக்கும் இனவாதிகள் மீள் உருவாக வழிவகுக்கும்.

முகநூலில் லைக்குகளை அள்ளுவதற்காகவும், ரிக்ரொக்கில் பிரபல்யமடைவதற்காகவும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பயன்படுத்த முற்பட்டால் அது தமிழினத்துக்கு இழைக்கப்படும் நூதன வடிவிலான துரோகம் என்றே கூற வேண்டும். புலம்பெயர் நாட்டில் உள்ளவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பொழுது போக்கு காமடி பீஸாக மாற்றாமல், அவரை மக்கள் பிரதிநிதியாக மாற்றுவதற்குரிய ஆலோசனைகளை வழங்க வேண்டும். புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பணத்தை மட்டுமல்ல சிறந்த பண்பாட்டு அம்சங்களையும் ஈழ மண் எதிர்பார்த்து காத்திருக்கின்றது.




# சிலப்பதிகாரம்: மெல்பேர்னுக்கு வந்த பூம்புகார்

## ஆச்சரியத்தில் மூழ்கடித்த ஒரு கனவுலக அனுபவம்




எழுதித் தயாரித்தவர்:
மாவை நித்தியானந்தன்
நெறியாள்கை:
பகீரதி பார்த்திபன்

இரண்டே முக்கால் மணி நேரம் உறைந்துபோய் இருந்துவிட்டு, மண்டபத்தை விட்டு வெளியே வந்த போது என் காதுகளில் விழுந்த இந்த வார்த்தைகள், என் ஆர்வத்தை இரு மடங்காக்கின.

“நேரம் போனதே தெரியவில்லை”.

“இப்படி ஒன்றை என் வாழ்க்கையிலேயே பார்த்ததில்லை.”

“சினிமாப் படம் போல், ஒரு இடமும் நிற்காமல் ஓடி முடிந்த மாதிரி.”

அடுத்த நாள் நான் போன பிறந்த நாள் கொண்டாட்டத்திலும், இதுதான் பேச்சு. யாருடன் தொலைபேசி அழைத்தாலும், நாடகத்துடன் தான் உரையாடல் தொடங்கும். ஒரு வாரம் போயும், அலை இன்னும் ஓய்வதாக இல்லை. இந்த அளவுக்கு இந்த நாடகத்தில் என்ன கவர்ச்சி?

பொதுவாக சுப்பர் சிங்கர், பாட்டுக்குப் பாட்டு போன்ற பெரும் இசை நிகழ்ச்சிகள் தான் எம்மவரைக் கவர்வதுண்டு. ஒரு நாடகம், மக்களை இப்படி ‘மயக்கியது’ எவ்வாறு? என்ன காரணங்கள்?

முதலில், இந் நாடகத்தில் தொய்வென்பதே இருக்கவில்லை. ஆரம்பம் முதல் முடிவு வரை, அருமையான தமிழ் இசை. இவை கூத்து மெட்டுகள் என்று கூறப்பட்டன. பாடியவர்களோ அற்புதம். நடிப்பா, பாட்டா வென்றது என்பதுதான் கேள்வி. நடிகர்கள் அத்தனை பேரும் மிகச் சிறப்பாக நடித்தார்கள். குறையையே காண முடியவில்லை. இந்த நாட்டில் பிறந்து, பாரதி பள்ளியில் தமிழ் கற்று வெளியேறியவர்களே இதில் அநேகர் என்று அறிகிறேன். நம்ப முடியவில்லை. எல்லோரும் தான் ஆச்சரியப்பட்டார்கள். இதை எங்கள் இரண்டாம் தலைமுறை



யினர் அளித்த நிகழ்ச்சி என்று கூடப் பெருமையுடன் கூறிவிடலாம்.

கதையைப் பெருமளவில் பாடல்கள் மூலம் தான் நகர்த்திச் சென்றார்கள். ஒவ்வொரு சொல்லும் தெளிவாகக் கேட்டது; புரிந்தது. மிக இலகுவான, அழகிய தமிழில் இப் பெருங்காப்பியத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள்.

மாலையொன்றில் முத்துப் பதித்தாற் போல், இடையிடையே கவர்ச்சியான நடனங்கள். கதை சொல்வோர் கூட, நடனமாடியே கதையைச் சொல்கிறார்கள். வேடுவர் நடனம், காளிதேவி நடனம் போன்றவை தனி அழகு.


உடை அலங்காரம் உச்சம். ஒவ்வொரு பாத்திரத்துக்கும் ஏற்ற, பொருத்தமான வேடங்கள். அம்பு வில்லில் இருந்து வாழை இலை வரை எல்லாப் பொருட்களையும் கச்சிதமாக உருவாக்கியிருக்கிறார்கள்.

(07ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# சிலப்பதிகாரம்: மெல்பேர்னுக்கு வந்த பூம்புகார்
## ஆச்சரியத்தில் மூழ்கடித்த ஒரு கனவுலக அனுபவம்








(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வளவு கவனம் எடுத்திருப்பார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த நாடகத்தின் வெற்றிக்கு, எத்தனையோ விடயங்கள் கைகொடுத்திருக்கின்றன. அவற்றில் உடையலங்காரமும், மேடைக்கான பொருட்களும் உள்ளடங்கும்.

தெளிவான ஒலி. ஒளியமைப்போ அற்புதம். காட்சிகளை ரசிக்க, ஒளி துணை நின்றது. இவற்றுக்கு மேலாக, பின்னணியில் காட்சிக் கேற்றவாறு தொடர்ந்து வந்துகொண்டிருந்த ஒளிப் படங்கள் பிரமாதம். எம்மைப் பூம்புகார், மதுரை, கோயில்கள், காடு மேடுகள், ஆறுகள், குளங்கள், கடற்கரை என்று எங்கெல்லாமோ அழைத்துச் சென்று காட்டினார்கள். உண்மையிலேயே, அவர்கள் ஆரம்பத்தில் சொன்ன மாதிரி 1800 ஆண்டுகள் பின்னால் சென்று மீண்டோம்.

தமிழர்களின் பாரம்பரியக் கூத்தை, அழகுற, நவீன அரங்குக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தியுள்ளனர். 50 பேருக்கு மேல் இதில் பங்குபற்றியதாகத் தெரிகிறது.

இது ஒரு அசாதாரண முயற்சி பிரமாண்டமான தயாரிப்பு என்பதில் எந்த ஐயமுமில்லை. எமது சமூகத்துக்கு, முற்றிலும் புதிது. இத்தகைய கலைப் படைப்புகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.





# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# சரி செய்ய முடியாவிட்டால் தடை செய்!

ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி



**“சமூக ஊடகங்கள் நம்மைத் துல்லியமாக அடிமையாக்கி வைத்திருக்கின்றன . அது எப்படியென்றால் நிஜ உலகில் இல்லாத ஒன்றை நமக்குத் தருகின்றன: அது மட்டுமின்றி இந்த ஊடகங்கள் நமக்கு தேவையான, உடனடியான, மிகவும் நேரிடையாக , ஒரு தனிநபருக்கு கிடைக்கவேண்டிய பிரத்தியேக மதிப்பை அளிப்பதன் மூலம் நம்மை எப்பொழுதும் அடிமை யாக கட்டுக்குள் வைத்திருக்கின்றன”**

**- டேவிட் அமேர்லாண்ட்**

ஆஸ்திரேலியாவில் வசித்துவரும் மூத்த தலைமுறையிடம் கடந்த இரண்டு தசாப்தங்களாக பருவ வயதினரிடையே நீங்கள் பார்த்து மிரண்டு போன பழக்க வழக்க மாற்றம் என்னவென்று கேட்டால், கண்ணை மூடிக்கொண்டு சொல்வார்கள், ‘அலைபேசி மற்றும் கடந்த பத்து வருடங்களில் சூறாவளித்தனமாக வளர்ந்திருக்கிற சமூக ஊடகங்களின் பயன்பாடு’ என்று. இப்போது பதின்மவயதில் குழந்தைகளை வைத்திருக்கிற பெற்றோர் பயப்படுவது அந்தக் குழந்தைகளின் அதீத சமூக ஊடகப் பயன்பாடும் ,அது தொடர்பான மனநிலைச் சிக்கல்களையும் கண்டுதான். ஒரு காலத்தில் அலைபேசி நமது வாழ்க்கையை இலகுவாக்கும் என்று சொன்னதெல்லாம் போய் , அலைபேசிப் பயன்பாட்டினைக் குறையுங்கள் என்று தொடர்ந்து பிரசாரம் நடத்த வேண்டிய காலகட்டத்துக்கு வந்திருக்கிறோம். நாம் இவ்வாறாக புலம்பும் இந்த வேளையில் , கோவிட் நோய் தொற்றுக்காலத்தில் நம்மையெல்லாம் கடுமையான மன அழுத்தங்களிலிருந்து காத்தவையும் இந்த சமூக ஊடகங்கள் தான் என்பதை நாம் மறுக்க முடியாது

இவ்வாறான சூழ்நிலையில் பிரதமர் அல்பானீஸ் சமூகக்காவலராக மாறி , இணையவெளி பாதுகாப்பு திருத்த மசோதாவினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறார். இந்த மசோதாவானது சமூக ஊடக தளங்களை 16 வயதிற்குட்பட்ட பயநர்கள் தங்கள் சேவைகளை அணுக அனுமதிப்பதைத் தடை செய்கிறது. இந்தச் சட்டத்தின் வழிகாட்டுதல்களை நிறைவேற்றத் தவறும் நிறுவனங்களுக்கு $50 மில்லியன் டொலர் (US$32m) வரை அபராதம் விதிக்கப்படும். ஆனால் இந்த மசோதா எவ்வாறு செயல்படும் என்பது பற்றிய விவரங்கள் எதுவும் இல்லை. அதுமட்டுமின்றி பயநர்களின் வயதினை உறுதி செய்யவேண்டிய நடவடிக்கைகளை இந்த சமூக ஊடகத் தளங்கள் உறுதி செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது . இன்னும் ஓராண்டுக்கு இந்த மசோதாவின் விபரங்கள் தெரியவரும். 2025 ஆம் ஆண்டின் இறுதியில் பயநர்களின் வயதினை உறுதி செய்வதற்கான தேவைப்படும் தொழில்நுட்பத்தின் சோதனை முடிவுகள் தெரியவரும் . ஆதலால் இன்னும் ஓராண்டுக்குள் இந்த மசோதா அமுலுக்கு வராது.

ஸ்னாப்சாட், ரிக்ரொக், எக்ஸ், இன்ஸ்டாகிராம், ரெடிட் மற்றும் பேஸ்புக் ஆகிய ஊடகங்கள் இந்த மசோதாவின் தடையின் கீழே வரும் என்று தகவல் தொடர்பு அமைச்சர் மிச்செல் ரோலண்ட் கூறியிருந்தாலும் எந்தெந்த நிறுவனங்களுக்கெல்லாம் இந்த சட்டம் பொருந்தும் என்பதையும் இந்த மசோதா குறிப்பிடவில்லை. ஆனால் YouTube தளமானது அதன் “குறிப்பிடத்தக்க” கல்விப் பயன்பாட்டின் காரணமாக இந்த மசோதாவின் தடையின் கீழே வராது என்றும் அவர் கூறினார். பிரதமர் அல்பானீஸ் “சமூக ஊடகங்களின் அதீத பயன்பாட்டினால் ஆஸ்திரேலியா இளம் சந்ததியினர், மனநிலைச் சிக்கலுக்கும் கடும் மனஅழுத்த சிதைவிற்கும் உள்ளாகின்றனர்” என்று இந்த சட்டத்தினை நிறைவேற்றுகையில் பேசியிருக்கிறார்.



yougov நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் 77 சதவிகித மக்கள் இந்த சட்டத்துக்கு ஆதரவளித்திருக்கின்றனர். ஆனால் வல்லுநர்களோ “இந்தச் சட்டங்கள் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் உரிமைகளில் கணிசமான அளவில் தலையிடுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன” என்று இந்த சட்டத்தினை குறித்து அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர். இந்த தடையினால் குழந்தைகள் தவறான வழிகளில் ( darkweb - இருண்ட வலை ) சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். அதுமட்டுமின்றி குழந்தைகள் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், ஆரோக்கிய உரையாடல்களுக்கு தேவையான தளத்தினை இல்லாமல் செய்கிறது. சுயேச்சை உறுப்பினரான ஆண்ட்ரு வில்கி அவர்கள் “குழந்தைகளை சமூக ஊடகங்களின் பாதிப்பில் இருந்து பாதுகாப்பது முக்கியமெனினும், அதைவிட பாதகமான சூதாட்ட விளம்பரங்களை தடை செய்யும் திட்டங்களை கைவிட்டது, சுற்றுச் சூழல் பாதுகாப்பு முகாமையை நிறுத்தி வைத்தது , சுற்றுச்சூழல் சட்ட சீர்திருத்தத்தை கைவிட்டது மட்டுமல்லாமல் காலநிலை மாற்றத்திற்கு பெரிதும் காரணமாக இருக்கும் புதைபடிவ எரிபொருட்களை மென்மேலும் தோண்டி எடுப்பதற்கு பன்னாட்டு பகாசுர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது இந்த அரசாங்கம். இணைய வெளியில் எங்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதில் நாங்கள் தீவிரப் படுத்தவேண்டும் என்று முயன்றால் முதலில் நாம் சமூக ஊடக நிறுவனங்களின் நிரல்களையும், படிமுறைத் தீர்வுகளையும் முறைப்படுத்தி கட்டுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அவர்கள் பொறுப்பான, பக்குவமான குழந்தைகளாக வாழ்வதற்கு வழிகாட்ட முடியும்”.என்கிறார்.

வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு மக்களிடம் நன்மதிப்பை பெறுவதற்காக லேபர் கட்சியால் அவசர கதியில் நிறைவேற்றப்பட்டதே இந்த சட்டம். சில சாதகங்களை விட பாதகங்களே மிக அதிகம். பயநர்களின் வயதினை எவ்வாறு உறுதி செய்யப்போகிறார்கள் மற்றும் பயநர்களின் தகவல்கள் எவ்வாறு பாதுகாப்பான முறையில் சேகரித்து விபரங்கள் சரிபார்க்கப்படும் என்பதற்குண்டான எந்த விவரங்களுமில்லை. தேர்தலையொட்டி மக்களை திசை திருப்பும் மலின உத்தியாகவே இந்தச் சட்டம் தெரிகிறது.

சமீபத்தில் சிட்னி பல்கலைக்கழகம் வழங்கும் மருத்துவர் மற்றும் மருத்துவம் சார்ந்த முனைவர் பட்டம் வழங்கும் விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது.அந்த விழாவில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் இறுதியாக ஹிப்போகிரேடஸ் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அந்த உறுதிமொழியின் சாராம்சமென வல்லுநர்கள் சொல்வதென்றால் “First, do no Harm “. முதலில் நோயாளிக்கு கேடு விளைவிக்காதே. இதேபோன்ற உறுதிமொழியை அனைத்து அரசியல்வாதிகளும் பதவியேற்பதற்கு முன்பே ஏற்றுக்கொள்ளவேண்டும். மக்களாகிய நாம் அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்வதென்னவென்றால் புறநானூற்று வரிகள் சொல்வது போல் “நல்லது செய்து ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்”. அதாவது உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை , உபத்திரவம் செய்யாதே என்பது தான்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# சாதிப்பாகுபாட்டுக்கு எதிராக சாதிக்கப்போகும் சட்டம்




'இப்போ எல்லாம் யாருங்கசாதி பாக்குறாங்க' இந்தச் சொல்லாடல் இந்தியாவில் மிகப் பிரபலம். இந்தியாவிலேயே இப்போ தெல்லாம் யாரும் சாதி பார்ப்பதில்லை என்றால், வெளிநாடுகளில் அதற்கான வாய்ப்பே இல்லை என்று தான் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அமெரிக்காமற்றும் இங்கிலாந்து வாழ் இந்தியர்கள் அப்படிச் சொல்வதில்லை. 2023 பெப்ரவரியில் அமெரிக்காவில் முதன்முதலாக சியாடேல் நகரம்சாதி ப் பாகுபாட்டை தடை செய்தது. சாதிப் பாகு-பாடு குறித்த பல ஆய்வுகள் இங்கிலாந்தில் மேற்கொள்ள பட்டுள்ளன. இரண்டு நாடுகளிலுமே சாதிப் பாகுபாட்டை தடுக்கும் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியென்றால் இந்தியாவை தாண்டி புலம்பெயர்ந்த இந்தியர்கள் மத்தியிலும் சாதிப் பாகுபாடுகள் இருக்கின்றன என்பதைத் தான் இவை நிருபிக்கின்றன.

அமெரிக்கா, இங்கிலாந்தில் சரி. ஆஸ்திரேலியாவில்?

அமெரிக்கா, இங்கிலாந்துடன் ஒப்பிடுகையில் ஆஸ்திரேலியாவில் அதிக அளவில் இந்தியர்கள் குடியேறியது தகவல் தொழில்நுட்பம் வளர்ந்த கால கட்டத்தில் தான். அதனால் தான் அந்த இரு நாடுகளிலும் மூன்றாம் தலை முறை புலம்பெயர் இந்தியர்களை காண்பது எளிதானதாக இருக்கிறது. ஆஸ்திரேலியாவில் இரண்டாம் தலைமுறை புலம்பெயர் இந்தியர்களைக் காண்பதே அரிது. அதனால் தான் அந்த நாடுகளில் சாதிப் பாகுபாடு பெரும் அளவில் சர்ச்சையான போதும் ஆஸ்திரேலியா மௌனம் காத்தது.

ஆனாலும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் கூட ஏற்படாத ஒரு மாற்றம் ஆஸ்திரேலியாவில் ஏற்பட்டிருக்கிறது. அது என்ன மாற்றம்? எப்படி நிகழ்ந்தது? யாரால் நிகழ்ந்தது?

கடந்த நவம்பர் மாதம் Australian Human Rights Commission (AHRC) வெளியிட்ட 63 பரிந்துரைகளில் சிலவற்றில் சாதிப் பாகுபாடு குறிப்பிட்டுள்ளது. அதில் 17வது பரிந்துரையில் 'சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக சட்ட பாதுக்காப்பு உண்டாக்குவதற்கான வழிமுறைகளை கண்டறிய பட வேண்டும், ஏற்கனவே இருக்கும் சட்டத்தை மாற்றி அமைப்பது உட்பட' என்று பரிந்துரைத்துள்ளது.

மற்ற இரண்டு நாடுகளை போல அல்லாமல், ஆஸ்திரேலியாவில் பெரும் சாதிப் பிரச்சினைகள் இல்லாத வேளையில் இப்படி ஒரு பரிந்துரை வெளியாவதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று நம்மில் யாருக்காவது தோன்றினால், ஒன்று நாம் உயர்சாதி என்று சொல்லப்படுகின்ற வகுப்பையோ அல்லது இடைநிலைச்சாதி என்று சொல்லப்படுகிற வகுப்பையோ சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஒரு இனப் பாகுபாடு நடைபெறுகிறதா இல்லையா என்பதை ஒடுக்குமுறைக்கு ஆளானவர்கள் தான் சொல்ல வேண்டுமே ஒழிய, அதனால் சிறிதும் பாதிக்கப்படாத வகுப்பைச் சேர்ந்தவர்கள், அப்படி ஒரு ஒடுக்குமுறை நடக்கவே இல்லை என்று சொல்வது அறமற்றது.

## அப்படி என்ன ஆஸ்திரேலியாவில் சாதி ஒடுக்குமுறை நிகழ்ந்துள்ளது?

ஒரு பெண், ஒரு வீட்டில் ஒரு அறையை மட்டும் எடுத்து வாடகைக்குத் தங்கியுள்ளார். சில மாதங்கள் கழித்து, அவர் உடன் தங்கும் நபர் , அந்த பெண் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதை அறிகிறார். அடுத்த முறை அந்தப் பெண் வீட்டின் வாடகையைச் செலுத்தும் பொழுது, அந்தப் பணத்தை கைகளால் வாங்காமல், ஒரு மேசையின் மீது வைக்கச் சொல்லி , அதன் மீது தண்ணீர் தெளித்து பணத்தை எடுக்கிறார்.

ஒரு குழந்தை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த குழந்தை என்பதால், பிறசாதியைச் சேர்ந்த குழந்தைகளின் பிறந்தநாள் விழாவிற்கு செல்லும் பொழுது, உள்ளே பூஜைகள் முடியும் வரை அந்தக் குழந்தை வெளியிலேயே நிற்க வைக்கப்பட்டார். (The Guardian). Brisbane இல் வசிக்கும் ஒரு நேபாளி, ஒரு ஒடுக்கப்பட்டசாதியைச் சேர்ந்தவர் என்பதை அறிந்து வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டார் (ABC ). Cairn இல் வாழும் ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேந்தவர், தன் தகப்பனார் இறப்பிற்கு சடங்கு செய்ய கூட ஒரு பார்ப்பனரும் முன்வரவில்லை என்கிறார் (ABC).

மேற்சொன்னவை வெறும் ஓரிரு எடுத்துக்காட்டுகள் தான். இணையத்தில் தேடினால், இந்தியாவில் என்னென்னசாதி ஒடுக்குமுறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றனவோ, அவை எல்லாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆஸ்திரேலியா விலும் கடைபிடிக்கப்படுகின்றன என்பதே நிதர்சனம். பல தலித்துகளுக்கு சாதி அடிப்படையில் வீடு மறுக்கப்படுகின்றது.

ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை இருக்கும் என்பது நியூட்டன் விதி.சாதி ஒடுக்குமுறை இருக்கும் என்றால், அதற்கு எதிரான செயற்பாடுகளும் இருக்க வேண்டும் அல்லவா. அதன்படி பல இடதுசாரி இயக்கங்கள் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக தங்கள் குரலைப் பதிவு செய்து வருகின்றன. அதில் ஒன்று தான் பெரியார் அம்பேத்கர் சிந்தனை வட்டம் (PATCA). AHRC சாதி ஒடுக்குமுறையை அங்கீகரித்ததில் PATCA வின் பங்கு அளப்பரியது.

ஆஸ்திரேலியாவில் சாதி ஒடுக்குமுறை இருக்கிறது என்று ஒருசில பத்திரிகைச் செய்திகளையும் வாய்வழிச் செய்திகளையும் கடத்தியதால் இது சாத்தியமாகவில்லை. இந்தக் கட்டத்திற்கு வர, PATCA நிர்வாகிகள் மேற்கொண்ட கருத்தரங்கங்கள், அரசியல்வாதிகளுடனான கலந்துரையாடல்கள்,சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக விடுத்த அறிக்கைகள் என்று அந்தப்பட்டியல் நீளும். அதன் அடிப்படையில் FECCA Tld; PATCA இணைத்து நடத்திய ஒரு மிக முக்கியமான ஆய்வே இந்த பரிந்துரைக்கான அடிப்படை காரணம்.

Federation of Ethnic Communities Councils of Australia என்பதே FECCA வின் விரிவாக்கம். ஆஸ்திரேலியாவில் வசிக்கும் பல்வேறு இன, மொழி, மதம் சார்ந்த மக்களை மேன்படுத்துவதற்காக இயங்கும் துறை. FECCA வின் அனுமதி பெற்று PATCA ஒரு கலந்தாய்வை மேற்கொண்டது. கலந்தாய்வை மேற்கொண்டது சிட்னி Macquire பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராக பணிபுரியும் திரு. செல்வராஜ் வேலாயுதம். இவர் புலம்பெயர்வு பன்முக கலாசாரம் மற்றும் இனம் பற்றிய துறைகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டவர்.

அவரின் தலைமையில் பல்வேறு கட்டங்களாக கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் சாதி ஒடுக்குமுறைக்கு உள்ளான பலதரப்பட்ட இந்தியர்களும் கலந்து கொண்டு தங்களின் கசப்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். சிட்னியில் பிரசித்தி பெற்ற ஹெலென்ஸ்புர்க் கோவிலில், 'ஜெய் ஸ்ரீராம்' சொன்ன பிறகே உணவு வழங்கப்படும் என்று ஒருவர் பதிவு செய்துள்ளார். Special Religious Education அடிப்படையில் ஹிந்து மதம் குறித்த வகுப்புகளில் சனாதன தர்மமாகியசாதி அடுக்குமுறை குழந்தைகளுக்கு பாடமாக எடுக்கப்படுகிறது என்பதும் பதிவாகியுள்ளது. இறை வழிபாட்டில், உணவில், கல்வியில், விழாக்களில் சாதி கடைப்பிடிக்கப்படுகிறது என்றும் பல துறைகளிலும் உயர்சாதி என்று சொல்லக் கூடியவர்களே பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதும் இந்த ஆய்வில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.


இந்தியர்கள் எப்போது பெருமளவில் ஆஸ்திரேலியாவிற்கு புலம்பெயர் ஆரம்பித்தார்களோ அப்போதிருந்தே சாதி ஒடுக்குமுறை தொடங்கி இருந்தாலும், 2019ல், கோவிட் காலகட்டத்தில் தான் ஆஸ்திரேலியா அரசாங்கம் முதன்முறையாக சாதி அடிப்படையில் ஒடுக்குமுறை இருப்பதை அறிந்தது. அதனை தொடர்ந்து PATCA, 2020 ஆண்டு தொடங்கி 30 க்கும் அதிகமான , சாதிப்பாகுபாடு குறித்த விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளது. PATCA வின் தொடர் முயற்சியால் AHRC ஆல் அங்கீகரிக்கப்பட்ட FECCA , PATCA வுடன் இணைந்து கலந்தாய்வை மேற்கொண்டு இதனைச் சாதித்துள்ளது.

இவை ஒருபுறம் இருக்க, குயின்ஸ்லாந்து அரசு, அதன் இனவாத எதிர்ப்புச் சட்டத்தில் சாதியை இணைத்துள்ளது. இது வரும் ஜூலை 2025 ல் இருந்து அமுலுக்கு வரும். இதே முன்னெடுப்பை தற்பொழுது NSW அரசிடமும் முன்னெடுத்து வருகிறது PATCA .


365 MEDIA
Production
AUSTRALIA TOUR
ஈழ மண்ணின் சொல்லிசை மன்னர்களின்
இசைக் கர்ஜனை
SCAN NOW !
LUCKY WINNER GET A FREE TICKET !
MEGA MUSICAL NIGHT
Tamil Rap 2025
MELBOURNE
SATURDAY 15 MARCH 2025
SPRINGVALE TOWN HALL
TO HOST IN YOUR CITY & FOR SPONSORSHIP
0415533622

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI


# இலங்கை அரசியல்: நடப்பது என்ன அடுத்தது என்ன?






● கருணாகரன்

இலங்கையில் நடப்பது என்ன? அடுத்தது என்ன?' என்ற கேள்வி இலங்கைக்குள், இந்தியா, சீனா உள்ளிட்ட ஆசியப் பிராந்தியத்தில், அமெரிக்காவை மையப்படுத்திய மேற்குலகில், தமிழ் பேசும் சமூகத்திடம், புலம்பெயர் மக்களிடம், அரசியல் நோக்கர்களிடத்தில் எனப் பல தரப்பிலும் எழுந்துள்ளது. அந்தளவுக்கு இலங்கையில் அரசியல் மாற்றங்கள் நடந்திருக்கின்றன. உண்மையாகச் சொன்னால் உலகம் முழுவதிலும் உள்ள பல தரப்புகளுக்கும் இதுவொரு அதிர்ச்சியளிக்கும் விடயமேயாகும்.

1. ஆயுதப்புரட்சி, தேர்தல் அரசியல் இரண்டிலும் கடந்த 55 ஆண்டுகளாகத் தோற்கடிக்கப்பட்டுக் கொண்டேயிருந்த JVP (தேசிய மக்கள் சக்தி - NPP) எப்படி இந்தளவு பெரும்பான்மைப் பலத்தோடு இரண்டு (ஜனாதிபதி - நாடாளுமன்றம்) தேர்தல்களிலும் வெற்றியைப் பெற்றது?

2. இதுவரையிலும் ஆட்சி அதிகாரத்திலும் அரசியல் மையத்திலும் மாறி மாறிச் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி (UNP), சிறிலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), சிறிலங்கா பொதுஜன பெரமுன (SLPP) ஆகிய கட்சிகள் முழுதாகப் பின்தள்ளப்பட்டது ஏன்?

3. தமிழ் பேசும் மக்கள் JVP (NPP) யை எந்த அடிப்படையில் ஏற்றுக் கொண்டனர்? எதற்காக ஆதரவளித்தனர்?

4. தமிழரசுக் கட்சி மற்றும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் பின்தள்ளப்பட்டது எதற்காக?

5. தமக்கான அரசியல் உரிமையைவிட, அதற்காகச் செய்யப்பட்ட தியாகங்களை விட நாட்டில் உள்ள ஊழல், பொருளாதார நெருக்கடி, அதிகார துஸ்பிரயோகம் போன்றவைதான் தமிழ் மக்களுக்கும் முன்னிலைப் பிரச்சினையாக உள்ளனவா?

6. அவ்வாறாயின் தமிழ்த்தேசிய அரசியலின் (பிராந்திய அரசியல் - Regional politics) எதிர்காலம்?

7. தென்னிலங்கையில் ஓரளவு செல்வாக்குச் செலுத்தி வந்த இடதுசாரியக் கட்சிகளின் பாரிய பின்னடைவு ஏன் ?

8. யாழ்ப்பாணத்தில் மருத்துவர் அருச்சுனா பெற்ற வெற்றியின் பின்னணி என்ன?

9. மட்டக்களப்பில் மட்டும் தேசிய மக்கள் சக்தி (NPP) வெற்றியடைய முடியாமற் போனதேன்?

10. முஸ்லிம், மலையகக் கட்சிகளின் - அரசியலின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றது?

இந்தக் கேள்விகளுக்குரிய பதிலைக் காண்பதற்குப் பல ஆயிரக்கணக்கான பக்கங்களில் நூற்றுக்கணக்கானோர் ஆய்வுகளைச் செய்துள்ளனர். இணைய வெளியில் கடந்த இரண்டு வாரங்களாக பல விதமான பார்வைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சி, You Tube போன்ற காண் ஊடகங்களிலும் (Visual Medias) இதைக் குறித்த ஆய்வுகளும் கருத்துப் பகிர்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கப்பால் வெளிநாட்டுத் தூதரகங்கள் தொடக்கம் ராஜதந்திர வட்டாரங்கள் வரையில் உசாவல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுக்குப் பல விதமான பதில்கள் கிடைத்துள்ளன. ஆனாலும் அவை முழுமையான பதில் என்று சொல்ல முடியாது. பகுதியளவு பதிலே அதிகம் என்றால், பகுதி அளவு உண்மையே பேசப்படுகிறது. மீதி உண்மை பேசப்படவில்லை. அதற்கு அவரவருடைய அரசியற் காரணம், அவரவரின் விருப்பு - வெறுப்புகளின் அடிப்படையிலான உளவியற் காரணம் உட்படப் பல காரணங்கள் உண்டு.

இப்படிப் பகுதியளவு உண்மை மட்டும் பேசப்பட்டால், மீதி உண்மை மறைக்கப்பட்டதாகவே இருக்கும். மீதி உண்மை மறைக்கப்பட்டால் பல விடயங்கள் தெரிந்து கொள்ளாமல் விடப்படும். அது சூழலைப் புரிந்து கொள்வதற்குப் பெருந்தடையை அளிக்கும். சூழலை - உண்மையை - யதார்த்தத்தை சரியாக அறிந்து கொள்ளவில்லை என்றால், மீளவும் தவறுகளே நடப்பதற்கு வாய்ப்பு உண்டு.

ஆகவே மேற்படி கேள்விகளுக்கு முடிந்தளவுக்கு உரிய பதில்களை விருப்பு - வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நேர்மையாகக் காண வேண்டும். அந்த அடிப்படையில் நோக்கினால் -

1. உலகமே (NPP - JVP $l) எதிர்பாராத வகையில் மாபெரும் வெற்றியடைந்தற்கான அடிப்படை:

JVP தன்னுடைய அரசியல் எதிர்காலத்தைக் குறித்து ஆழமாகச் சிந்தித்தது. பல கோணங்களிலான உரையாடல்களையும் விவாதங்களையும் செய்தது. இதில் முரண்பட்டு அவ்வப்போது வெளியேறிச் சென்றவர்கள் பலர். ஆனாலும் அது தன்னுள் ஒரு வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் தன்னை முன்னகர்த்தி வந்தது. அதாவது, JVP jன்னுடைய கடந்த காலத் தவறுகளிலிருந்தும் தனக்கு முன்னுள்ள தடைகளிலிருந்தும் புதிய யதார்த்தத்திலிருந்தும் படிப்பினைகளைத் திறந்த மனதோடு கற்றுக் கொண்டது.

அதனுடைய பெறுபேறே NPP. அதாவது JVP யின் நெகிழ்ச்சியடைந்த புதிய வடிவமே NPP யாகும். NPP க்கு JVP யைப்போன்ற இறுக்கமான பிடிவாதங்களில்லை. அதனுடைய நெகிழ்ச்சித் தன்மையே அது தன்னை விரித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அந்த விரிவில் பல தரப்பையும் உள்ளீர்த்தது - உள்ளிழுத்தது. இதுவே அதனுடைய வெற்றியாகும்.

ஆயுதப்போராட்ட அமைப்பொன்று இவ்வாறு நெகிழ்ச்சியடைவது கடினமானது. ஆனால், காலம் பிந்தினாலும் (அரை நூற்றாண்டு கடந்தாலும்) உரிய இடத்துக்கு JVP வந்து சேர்ந்துள்ளது. அந்த உரிய இடமென்பது அது எதிர்பார்த்த - இன்னொரு வகையில் அது எதிர்பார்த்தேயிராத இந்த வெற்றியாகும்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான வரலாற்றுண்மையைச் சொல்ல வேண்டும். 2007, 2008 இல் வன்னியில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைப் படைகளுக்குமிடையில் நடந்த உக்கிரமான போரில் புலிகள் பின்னடைவைச் சந்தித்து, மிகப் பெரிய நெருக்கடிக்குள்ளாகிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த நெருக்கடியைக் கடப்பதற்குரிய வகையில் சில மாற்று உபாயங்களைச் சிலர் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு முன்வைத்தனர். அதில் ஒன்று, விடுதலைப்புலிகள் மீது இந்திய அரசு உட்படப் பல நாடுகள் விதித்திருக்கும் 'தடை' என்ற சட்டப் பூட்டினை உடைப்பதற்கு, புலிகள் தந்திரோபாய அடிப்படையில் முயற்சிப்பது அவசியம் என்பதாகும்.

எத்தகைய அடிப்படையில் அந்த உபாயம் அமையுமென்றால், விடுதலைப்புலிகளின் தலைமையில் ஒரு நெகிழ்ச்சியை உருவாக்க வேண்டும். அதன்படி தலைமைப்பொறுப்பை நம்பிக்கைக்குரிய வேறு ஒருவருடைய கைக்கு அல்லது ஒரு அணியின் கைகளுக்கு மாற்றி அறிவிப்பது, புலனாய்வுக் கட்டமைப்புப் பொறுப்பை மாற்றுவது உட்பட நிலைப்பாடுகளில் சற்று நெகிழ்வான மாற்றங்களை உண்டாக்குவது என இது விரிந்தது.

அவ்வாறு நெகிழ்ச்சியை உண்டாக்கும் போது அது இயக்கத்தின் மீதான நெருக்கடியைத் தணிக்கக் கூடியதாக இருக்கும். மாற்று உபாயமொன்றைக்குறித்துப்புலிகள்சிந்திக்கின்றனர் என்ற அடையாளம், பல வாசல்களைத் திறக்கும். அது போராட்டத்தையும் மக்களையும் போராளிகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு உதவும் என வலியுறுத்தப்பட்டது.

2. அநுர - தேசிய மக்கள் சக்தி (NPP) க்கு தேர்தல்களில் கிடைத்த வெற்றி:

அ) மாற்றத்தை நோக்கி நெகிழ்வதற்கான தயக்கம் JVP க்கும் நீண்ட காலமிருந்தது. அதனோடு நெருங்கியிருந்தோருக்கும் அதை உன்னிப்பாக அவதானித்தோருக்கும் இது நன்றாகத் தெரியும். ஆனால், 50 ஆண்டுகளுக்குப் பிறகாவது அது நெகிழ்ந்து, அதற்குரிய பலனையும் (பரிசையும்) பெற்றுள்ளது. இதில் அநுர குமார திசநாயக்கவின் பங்கு பெரியது. (JVP யின் நெகிழ்ச்சியோ NPP என்ற புதிய வடிவமோ மட்டும் வெற்றியைப் பெறவில்லை என்று வாதிடுவோருண்டு. அதில் உண்மையுண்டு. ஆனாலும் JVP யினுள் நிகழ்ந்த மாற்றம் அது பெற்ற வெற்றிக்கு கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது என்பதை மறுக்கவே முடியாது).

இந்த நெகிழ்ச்சியும் அது உண்டாக்கிய மாற்றத்தையும் அடுத்து, இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட வெளியுலகம் NPP யுடன் உறவைத் தொடங்கியது. குறித்த பல நாடுகளின் தூதுவர்கள் NPP பணிமனையைத் தேடிச் சென்று சந்தித்தனர் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இது அப்போதே NPP யின் வெற்றியைக் குறித்த சமிக்ஞையாக உணரப்பட்டது. இதைச் சரியாக மதிப்பிட்ட இந்தியாவும் அமெரிக்காவும் NPP யுடன் தொடர்ச்சியாக உறவைப் பேணி வந்தன.

ஆ) கடந்த ஆட்சியாளர்களின் தவறுகளைச் சரியாக இனங்கண்டது NPP. அதை அவர்களுடைய பலவீனமாக்கியது. அதாவது எதிர்த்தரப்பின் பலவீனத்தைப் பயன்படுத்தி, அவர்களுடைய பலத்தை உடைத்தது.

இ) கடந்த ஆட்சியாளரின் மீது மக்களுக்கிருந்த அதிருப்தியைச் சரியாக மதிப்பிட்டு தன்னுடைய வேலைத்திட்டத்தைத் தனக்குச் சாதகமான முறையில் வடிவமைத்தது. மக்களின் உணர்வோடும் பிரச்சினைகளோடும் இணைந்து நின்றது.

ஈ) 'அரகலய' வை அந்தப் போராட்டத்தை - அதனுடைய கோசத்தை - அவதானித்து, அதைத் தன்னுடைய வெற்றிக்கேற்ப சாதுரியமாகப் பயன்படுத்திக் கொண்டது.

உ) எந்தச் சூழலிலும் கடந்த காலக் கறைகளோடும் அரசியற் பலவீனங்களோடும் இருந்த எந்த அரசியல் தரப்புகளோடும் உறவில்லை என்ற நிலைப்பாட்டைத் தீவிரமாகக் கொண்டது. அதன் மூலம் NPP தனித்துவமான ஒரு கட்சி, சுத்தமான - நேர்மையான தரப்பு என்ற தோற்றத்தைக் காட்டியது.

ஊ) தற்போதைய பொது மக்களின் உளநிலைக்கு ஏற்ப ஒரு கவர்ச்சிகரமான தலைவராக (A charismatic leader) அநுர குமார திசநாயக்கவை முன்னிறுத்தியது. இது முக்கியமானது, சரியோ தவறோ இன்றைய பொதுமக்கள் உளவியலில் (Public Psychology) (இதை ஊடக உருவாக்க உளவியல் -This is the psychology that the media creates என்றும் வரையறுத்துக் கொள்ளலாம்) இத்தகைய பிம்பத்துக்கு வலு அதிகம் (Image has more power). அமெரிக்காவில் ட்ரம், இந்தியாவில் மோடி, யாழ்ப்பாணத்தில் அருச்சுனா போன்றவர்கள் எளிய உதாரணங்கள்.

இதில் நேர்மறையான சக்திகளும் உண்டு. எதிர்மறையான சக்திகளும் உண்டு. இதை இரண்டு வகையாகப் பிரிக்க வேண்டும். பரபரப்பின் ஊடாக வளர்ச்சியடைதல் ஒரு வகை. இதை இன்றைய பல சக்திகளும் எதிர்மறையான பரபரப்பின் (Negative sensation) ஊடாகவே செய்கின்றன. இரண்டாவது, சரியான பாதையில், சரியான முறையில் பயணிப்பதாக நம்பிக்கை கொள்ள வைத்துப் பிரபலமாகுதல். இது நேர்மறையான முறையில் பிம்ப உருவாக்கம் (Positive image building) செய்தலாகும். NPP அல்லது அநுர அல்லது இரண்டும் இணைந்து மேற்கொண்டது நேர்மறைப் பிம்ப உருவாக்கமாகும் (Creating a positive image).

எ) இவற்றை முதலீடாகக் கொண்டு தனக்கான புதிய வடிவத்திலான பரப்புரையை (A new form of propaganda) அல்லது புதிய உத்திகளுடனான பிரசாரத்தை (Campaign with new strategies) NPP மேற்கொண்டது. இதில் அநுர 'AKD' யாக, கவர்ச்சி மிக்க தலைவராக (Charismatic leader) ஆக மேலுயர்த்தப் பட்டார். ஜனாதிபதித் தேர்தலில் NPP வெற்றியை நோக்கி நகர்வதற்கு இந்த அடிப்படையே பெரிதும் உதவியது.

ஏ) ஜனாதிபதித் தேர்தலில் அநுர (NPP) வெற்றியடைந்ததோடு கள நிலவரம் முற்றிலும் மாறியது. அதற்குப் பிறகு அநுர (AKD), NPP அலை அடிக்கத் தொடங்கியது. அதை எதிர்கொள்ளக் கூடிய நிலையில் எதிர்க்கட்சிகள் ஏதுமிருக்கவில்லை. NPP முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை மறுக்க முடியாமலே எதிர்த்தரப்புகள் திணறின. இது எதிர்பாராத வெற்றியை, எதிர்பார்த்திராத இடங்களில் எல்லாம் NPP க்குக் குவித்தது. முக்கியமாக வடக்கில் - யாழ்ப்பாணத்தில்.

3. அதிகாரத்திலிருந்த பாரம்பரியக் கட்சிகளின் தோல்வியும் சிதைவும்:

அ) மாறிக் கொண்டிருக்கும் சூழலை (மக்களின் மனநிலையை) புரிந்து கொள்ளத் தவறியது - மறுத்தது. (NPP அல்லது JVP தன்னைப் பரிசோதனை செய்து, புதிய சூழலுக்கேற்ப நெகிழ்ந்து மாற்றியமைத்தது. இவையோ மேலும் இறுகிப் பின்னடைந்தன.

ஆ) தலைமைத்துவப் போட்டிகள்

இ) மக்களுடைய தேவைகள், பிரச்சினைகள், நெருக்கடிகள் போன்றவற்றுக்கு வெகு தொலைவில் நின்றமை. அதாவது அதிகார இடைவெளியை இட்டு நிரப்பாமல் அதைத் தொடர்ந்தும் பேணியமை. அதாவது, தமது அதிகார நிலையிலிருந்து மக்களை நோக்கி இறங்கி வரத் தயாரற்ற பாரம்பரியத்தன்மை.

ஈ) அரசியலை மக்களுக்கான பணிச் செயற்பாடு என்ற நிலையிலிருந்து மாற்றி, அரசியலை வணிகமயப்படுத்தியமை. அல்லது அரசியல் வியாபாரத்தை (Political business) மேற்கொண்டு வந்தமை. இப்படிப் பல.

4. NPP க்கான தமிழ் பேசும் மக்களின் ஆதரவு:

அ) சிங்களக் கட்சிகளைப் போலவே தமிழ் பேசும் கட்சிகளும் (தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகளும்) தம்மைப் புதுமைப்படுத்தி ஒழுங்கமைக்கவில்லை. முக்கியமாக இந்தக் கட்சிகளிடத்திலும் அவற்றின் தலைமைகளிடத்திலும் புத்தாக்கத் திறன் இல்லை (No innovation skills) என்ற ஏமாற்றத்துக்கு தமிழ் பேசும் மக்கள் தள்ளப்பட்டிருந்தனர்.

ஆ) 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி (வரிசையுகம்) தமிழ் பேசும் மக்களையும் மிகப் பாதித்தது.

இ) இந்தக் கட்சிகளிடையே (இந்தத் தரப்புகளிடையே) நிலவிய மக்கள் விரோதப்போக்கு.

ஈ) தமக்கிடையிலான முரண்பாடுகளும் ஒற்றுமையின்மையும்.

உ) மக்களுக்கும் இந்தக் கட்சிகளுக்கும் இடையில் நிலவிய இடைவெளி.

ஊ) தெளிவான அரசியற் பார்வையும் உறுதியான அரசியல் நிலைப்பாடும் இல்லை என்ற நிலை. (ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு நீண்ட நாட்களுக்குப் பின்பே தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகள் தட்டுத் தடுமாறி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்கும் முடிவை எடுத்தன. தமிழரசுக் கட்சி இன்னும் பிந்தியே அந்த முடிவை அறிவித்தது. ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ்ப் பொது வேட்பாளரைத் தனியாக நிறுத்தினாலும் நாடாளுமன்றத் தேர்தலின்போது அது நடந்து கொண்ட முறைமை மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

இவையெல்லாம் இணைந்து NPP யை ஆதரிக்கத் தூண்டின. இங்கே ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயமொன்றுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற வடக்குக் கிழக்கு மற்றும் மலையகத்தில் சஜித் பிரேமதாசவுக்கே ஆதரவு கிடைத்தது. வடக்குக் கிழக்கில் இன்னொரு தொகுதி வாக்கு அரியநேத்திரனுக்குக் கிடைத்தது. இங்கெல்லாம் அநுர – NPP பின்தங்கியிருந்தது.

ஆனால், அடுத்த மாதம் இது தலைகீழாகியது. அதாவது ஒரு மாதத்தில் இந்த அதிரடி மாற்றம் எப்படி நிகழ்ந்தது? அந்த ஒரு மாதத்தில் புதிய அரசாங்கம் எந்தப் பெரிய கவர்ச்சிகரமான - நிறைவளிக்கக் கூடிய திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை.

வெறுமனே எதிர்பார்ப்பின் அடிப்படையில் - நம்பிக்கையின் அடிப்படையில்தான் NPP க்கான ஆதரவை தமிழ் பேசும் மக்கள் அளித்தனர். அதுவும் JVP இனவாதத்தைப் பேசியது, வடக்குக் கிழக்கு மாகாணசபையை உடைத்தது, புலிகள் – அரசு பேச்சுக்களை எதிர்த்தது என்பதையெல்லாம் தெரிந்து கொண்டே மக்கள் NPP க்கு வாக்களித்தனர். NPP யை விடவும் அதிகமானோர் அநுர குமார திசநாயக்கவையே நம்பினர். அவருக்காகவே NPP க்கு ஆதரவளித்தனர்.

அநுரவின் மீதான இந்த நம்பிக்கை விரிவாக ஆராயப்பட வேண்டியது. இப்பொழுது JVP யின் செயலாளர் ரில்வின் மாறுதலான முறையில் பேசினாலும் அநுரவையே பலரும் நம்புகின்றனர்.

5. தமிழரசுக் கட்சி மற்றும் ஏனைய தமிழ்த்தேசியக் கட்சிகள் பின்தள்ளப்பட்டமை:

அ) ஏற்கனவே கூறப்பட்டதைப்போல பல பிளவுகள்.

ஆ) தெளிவற்ற அரசியல் நிலைப்பாடு.

இ) தலைமைத்துவப் போட்டி.

ஈ) மக்களுடைய பிரச்சினைகளுக்கும் கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளுக்கும் இடையிலான நீண்ட இடைவெளி.

உ) போருக்குப் பிந்திய அரசியலை (Post - War politics) முன்னெடுத்திருக்க வேண்டிய இந்தத் தரப்பு அந்த அரசியலின் பக்கமே செல்லாதிருந்தது. இதுபோன்ற குறைபாடுகளும் தவறுகளும் இவற்றைத் தோல்விக்குள்ளாக்கின. அதாவது மக்களால் தண்டனை அளிக்கப்பட்டது.

ஊ) ஜனநாயக உள்ளடக்கமின்மை.

எ) சமூக ஒடுக்குமுறை, பால் ஒடுக்குமுறை, பொருளாதார ரீதியிலான வர்க்க ஒடுக்குமுறை போன்றவற்கு எதிரான வேலைத்திட்டமும் கொள்கையும் இல்லாமை. அதாவது சமூக நீதியைக் குறித்த ஆழமான புரிதலின்மையும் அதற்கான அரசியல் உறுதிப்பாடின்மையுமாகும்.

ஏ) எந்த நிலையிலும் தம்மைப் பரிசீலித்து மீள்நிலைப்படுத்தவோ புதுமைப்படுத்தவோ விளையாமை.

6. அரசியல் உரிமையை விட, செய்யப்பட்ட தியாகங்களை விட ஊழல், பொருளாதார நெருக்கடி, அதிகார துஸ்பிரயோகம் போன்றவைதான் தமிழ் மக்களுக்கும் முன்னிலைப் பிரச்சினையா?

அ) நீண்ட காலமாக மக்கள் விடுதலை அரசியல் உணர்வோடு, உரிமை அரசியலின் பக்கமாகவே நின்றனர். அதற்காக செலவழிக்கப்பட்ட - செய்யப்பட்ட - தியாகங்களை மதித்தனர். ஆனால், ஆனால், தமிழ் அரசியற் சக்திகள் அவற்றை அரசியல் வணிகமாக்கி, தம்மை வளப்படுத்திக் கொண்டு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முற்படாததைக் கண்டு சலிப்படைந்தனர். வெறுப்படைந்தனர்.

உண்மையில் அநுரவும் NPP யும் பெற்ற வாக்குகளும் ஆதரவும் ஏனைய தரப்புகளின் வெறுப்பினால் உருவானதேயன்றி, முற்று முழுதாக அநுரவையும் NPP யையும் நம்பி தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. அதாவது, NPP பெற்றது அதன் மீதான விருப்பு வாக்கு என்பதை விட ஏனைய தரப்புகளின் மீதான வெறுப்பு வாக்குகளையாகும்.

ஆ) அரசியல் தீர்வை எட்டக் கூடிய சாத்தியங்களும் அதற்கான அர்ப்பணிப்பு, விவேகம், அரசியல் உறுதிப்பாடு, பலம் போன்றவை எதுவும் தமிழ்த் தரப்பிடம் இல்லை என்பதால், தொடர்ந்தும் தமிழ்த் தேசியத் தரப்போடு நிற்பதில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தனர். அதை NPP வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது.

7. தமிழ்த்தேசிய அரசியலின் (பிராந்திய அரசியல் - Regional politics) எதிர்காலம்?

அ) சற்றுக் கடினமான சூழலில்தான் தமிழ்த்தேசிய அரசியல் (பிராந்திய அரசியல் - Regional politics) உள்ளது. இதை மீட்டெடுக்க வேண்டுமாயின் போருக்குப் பின் பின்னான கால அரசியலை முன்னெடுக்க வேண்டும். முக்கியமாகப் புத்தாக்க முறையிலான அரசியலை முன்னெடுப்பது அவசியம். சர்வதேச அரசியல் போக்கு, இந்திய – சீனப் பிராந்திய, வணிக, அரசியல் ஆதிக்கப்போட்டியை விளங்கி, ராஜதந்திரமாகச் செயற்படுதல், மக்களோடு அரசியல் உறவை வளர்த்தல், களப்பணியை ஆற்றுதல், யதார்த்தமான அரசியல் நிலைப்பாட்டை உருவாக்குதல், அதை நோக்கி நகர்வதற்கான முயற்சிகளில்

(14ஆம் பக்கம் பார்க்க)












# இலங்கை அரசியல்: நடப்பது என்ன அடுத்தது என்ன?

*(13ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அர்ப்பணிப்போடு செயற்படுதல் என அமைந்தாலே தமிழ்த்தேசிய அரசியல் தப்பிப் பிழைக்கும். ஆனால், சில தரப்பு இந்திய எதிர்ப்பு (முன்னணி) பல தரப்புகளும் சீன எதிர்ப்பு என்றே செயற்படுகின்றன. இது தமிழ் மக்களை மேலும் பின்னடையச் செய்யும்.

ஆனால், நடப்பு அரசாங்கமும் (NPP) இனவிரோதப் போக்கையே கடைப்பிடித்தால் தமிழ்த்தேசிய அரசியல் (எதிர்ப்பு அரசியல்) மீண்டும் சூடுபிடிக்கும். ஆனால், வெற்றி யளிக்காது.

இதேவேளை தமிழ்த்தேசிய சக்திகள் மீண்டும் ஒருங்கிணைந்து நின்றால் வெற்றியைப் பெறலாம் என்று கருதப்படுகிறது. அது தவறு. வேண்டுமானால் தேர்தல்களில் ஒரு இடைக்கால வெற்றியைப் பெறலாம். நீண்ட கால அடிப்படையில் அது வெற்றியளிக்காது. மக்களுக்கும் வெற்றி கிட்டாது. அரசியல் நிலைப்பாடுகளும் உபாயங்களுமே இனி வெற்றிக்கான அடிப்படைகளும் செல்வழிகளுமாகும்.

**8. தென்னிலங்கையில் இடதுசாரியக் கட்சிகளின் பின்னடைவு ஏன்?**

அ) தென்னிலங்கை இடதுசாரிகள் பெரும்பாலும் சிறிலங்க சுதந்திரக் கட்சியுடன்தான் நெருக்கமாக நின்றுள்ளனர். பின்னர் பொதுஜன பெரமுனவோடு. தனித்து நின்று பெரியதொரு தளத்தை நிர்மாணிக்கவில்லை. எனவே சு.கவும் பொதுஜன பெரமுனவும் பின்னடைவுக்குள்ளானதோடு இடதுசாரிகளும் சுடுகாட்டுச் சாம்பலை அள்ளிப் பூசும் நிலைக்குள்ளாகின.

**9. யாழ்ப்பாணத்தில் மருத்துவர் அருச்சுனா பெற்ற வெற்றியின் பின்னணி என்ன?**

அ) ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளதைப்போல எந்த அரசியல் அடிப்படையும் வழிமுறையும் இல்லாமல், பொதுமக்கள் உளவியலில் (Public Psychology) தன்னை நிறுத்தி வெற்றியடைந்தார். இதற்கான முதலீடாக மக்களிடம் மேலோங்கியிருந்த மருத்துவமனைகளைப் பற்றிய கோபத்தையும் அதிருப்தியையும் பயன்படுத்திக் கொண்டார். தன்னை ஒரு நியாயவானாகவும் விளைவுகள் எதையும் பொருட்படுத்தாமல் மக்களின் சார்பாகக் குரல் எழுப்பக் கூடியவராகவும் தோற்றம் காட்டினார்.

பொதுவாகவே அரச உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் இந்த மாதிரிப் பொது வெளியில் கண்டபாட்டுக்குக் கதைப்பதில்லை. போராடுவதும் இல்லை. அருச்சுனா இந்த வழமையை மீறித் துருத்திக் கொண்டு நின்றார். அது அவருக்கான அறிமுகத்தையும் கவர்ச்சியையும் கொடுத்தது. இதனை இணையத்தளங்களிலும் யுடியூப் களிலும் தெளிவாகப் பார்க்க முடியும்.

அதாவது NPP, முன்னைய ஆட்சியாளர்களின் மீதான அதிருப்தியையும் கோபத்தையும் பயன்படுத்தியது. அருச்சுனா, அதிகாரிகளின் மீதான கோபத்தையும் அதிருப்தியையும் தனக்கான முதலீடாக்கினார். கூடவே தன்னுடைய பாணியான எதிர்மறைப் பிம்ப உருவாக்கத்தையும் (Negative Marketting) பயன்படுத்திக்கொண்டார்.

இன்னொன்றையும் சொல்லலாம். யாழ்ப்பாண மக்களுக்கு - யாழ்ப்பாணத் தலைமைக்கு - யாழ்ப்பாணத் தனத்துக்கு விழுந்துள்ள அடி இது. யாழ்ப்பாணம் தனக்கான அரசியல் தலைவர்களைக் கண்டுபிடித்து வைத்திருப்பதே இதைக் காட்டும். தமிழரசுக் கட்சிக்கான தலைவர் மாவை சேனாதிராஜா தொடக்கம்.... மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் - அருச்சுனா, சிறிதரன் உட்பட. ஏன் NPP தரப்பில் யாழ்ப்பாணத்தில் தேர்வு செய்யப்பட்டவர்களைப் பற்றியும் கேள்வி உண்டு.

ஏன் EPRLF, PLOT, TELO மற்றும் ஸ்ரீகாந்தா - சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பின் தலைமைகளும் புதிய அரசியல் உணர்வைப் பெறாதவர்களே! குறைந்த பட்சம் JVP க்குள் நடந்த மாற்றம், NPP பெற்ற வெற்றி, தமக்கு ஏற்பட்ட தோல்வி போன்றவற்றுக்குப் பின்னர் கூடத் தம்மைப் பரிசீலித்துக் கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். இப்படியானவர்களை இன்னும் யாழ்ப்பாணம், கட்சித் தலைவர்களாகவே வைத்திருக்கிறது.

இதற்கு முன்பும் பல தவறான தெரிவுகளை யாழ்ப்பாணம் செய்துள்ளது. விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம், விஜயகலா மகேஸ்வரன், அங்கயன் ராமநாதன் என அரசியல் கோமாளிகளைத் தெரிவு செய்த நீண்ட பட்டியல் உண்டு. அரசியலில் மட்டுமல்ல, யாழ்ப்பாணத்து ஊடகங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அதனுடைய புத்திஜீவிகளின் தரமும் ஆளுமையும் சமூகப் பங்களிப்பும் பங்கேற்பும் யாழ்ப்பாணத்தை தளமாகவும் தலைமையகமாகவும் கொண்ட அரசியற் கட்சிகள், யாழ்ப்பாணத்திலே குந்திக் கொண்டிருக்கும் அரசியற் தலைவர்கள்... அடேயப்பா.. சொல்லி வேலையில்லை.

**10. மட்டக்களப்பில் மட்டும் தேசிய மக்கள் சக்தி (NPP) வெற்றியடைய முடியாமற் போனதேன்?**

அ) மட்டக்களப்புக் களம் வேறு விதமானது. அங்கே தமிழ் முஸ்லிம் சமூகத்தினர்தான் செல்வாக்குச் செலுத்தும் தரப்பினர். திருகோணமலை, அம்பாறை, வன்னி போன்றதோ அல்லது யாழ்ப்பாணத்தைப்போன்றதோ அந்தக் களம் இல்லை. என்னதான் வெளியே தமிழ் - முஸ்லிம் உறவைப் பற்றிப் பேசினாலும் அங்கே முஸ்லிம் வெறுப்பு தமிழர்களிடமும் தமிழர் மீதான கடுப்பு முஸ்லிம்களிடத்திலும் உண்டு. இதைக் கணித்து NPP தன்னுடைய தரப்பு ஆட்களை நிறுத்தவில்லை. இதனால் தமிழரசுக்கட்சி வெற்றிடையக கூடியதாக இருந்தது. அத்துடன், வடக்கைப்போல தமிழ்த்தேசிய அணிகளின் சிதைவுச் செல்வாக்கு அங்கே இல்லை என்பதும் பிள்ளையானுடன் சாணக்கியன் மோதி உருவாக்கிய பிரபலமும் சாணக்கியனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் வாய்ப்பாகியது.

இவை அனைத்தும் அநுர–NPP யின் தேர்தல் வெற்றிக்கான அடிப்படைகள் – பின்னணிகள். இப்பொழுது NPP ஆட்சி நடத்துகிறது. இதில் IMF குறித்த விடயம், இந்தியா, சீனா உள்ளிட்ட செல்வாக்குச் செலுத்தும் நாடுகளுடனான உறவு, மேற்குலகத்துடனான தொடர்பாடல், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைத்தல், இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுதல், அரசியலமைப்பை மாற்றுதல், படைகளைக் குறைத்தல், ஊழலை இல்லாழித்தல், குற்றவாளிகளைத் தண்டித்தல் - என நீண்டதொரு வேலைப்பட்டியல் உண்டு. அதாவது மக்களுடைய எதிர்பார்ப்புப் பட்டியல் உள்ளது.

இதையெல்லாம் அது எந்தளவில் சாத்தியப் படுத்தும்? அதற்கான கால எல்லை என்ன? முக்கியமாக பொருளாதார வளர்ச்சியையும் இனப்பிரச்சினைத் தீர்வையும் அதனால் சாத்தியப்படுத்த முடியுமா? என்ற கேள்விகள் எழுகின்றன ஆனால் முடிந்தளவுக்கு சிலவற்றில் முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கலாம்

இதேவேளை NPP ஒரு முற்போக்கான, இடதுசாரியத் தன்மையைக் கொண்ட அமைப்பில்லை. அது சீரழிவின் வடிவம் என்று சொல்வோரும் உண்டு. இதற்கும் மேலே சென்று NPP யை சுயாதீனமாகச் செயற்படுவத்கு JVP விடாது. அதனுடைய வெளிப்பாடே ரில்வின் சில்வாவின் நடவடிக்கைகள்.

NPP யைப் பற்றிய சந்தேகங்கள்:

தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வை NPP எட்டுமா? மாகாணசபையைத் தொடருமா? என்ற கேள்விகள் உண்டு.

இது JVP மீதான கடந்த கால மனப்பதிவின் வெளிப்பாடு. JVP நீண்ட தூரம் சென்று விட்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தவிர மாகாணசபை நீக்கம் எளிதானதல்ல. அதில் அது இரு நிலையில் சிக்கியுள்ளது. மாகாணசபையில் JVP போட்டியிட்டிருக்கிறது. ஆகவே அதை அது நிராகரித்து நீக்குவதற்கான காரணத்தைப் பலமான முறையில் வைக்க வேண்டும்.

அதாவது அதற்கு மாற்று என்ன என்று தெரிவிக்க வேண்டும். அந்த மாற்றை உருவாக்க வேண்டும். அதை வலியுறுத்துவதே தமிழ், முஸ்லிம், மலையகத் தரப்பின் அரசியலும் போராட்டமுமாகும்.

இரண்டாவது மாகாணசபை இந்தியாவுடன் முடிச்சுப் போடப்பட்ட ஒன்றாகும். அதையும் NPP கடக்க வேண்டும். அதற்கு முன் இந்தியாவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும். ஏற்கனவே பொருளாதாரம், இந்திய மீனவர், இந்தியப் பிராந்தியப் பாதுகாப்பு எனப் பல பிரச்சினைகள் – விடயங்களில் இந்தியாவுடன் பேசி உடன்பட வேண்டியிருக்கிறது. ஆகவே இதை எப்படியும் (விரும்பியோ விரும்பாமலோ) செய்தாக வேண்டிய நிலை NPP க்குண்டு.

அடுத்தது, NPP புரட்சிகர சக்தியா இல்லையா என்பதைக்குறித்தது.

NPP ஒன்றும் புரட்சிகர சக்தியே அல்ல. அது புரட்சியின் வழியில் ஆட்சியை – அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை. இங்கே நடந்திருப்பது தேர்தல் வழிமுறையின் மூலமான சாதாரண ஆட்சி மாற்றம். சட்ட வரம்புகளின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்க முடியும். தீர்மானங்களை நிறைவேற்றலாம். திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலும். அல்லது யாப்பை மாற்றி அமைக்க வேண்டும். எந்த நிலையிலும் அதை மீற முடியாது.

கியூஃபா, ரஷ்யா, சீனாவில் நடந்தது புரட்சி. அங்கே ஆட்சியை ஆயுதப்புரட்சியின் மூலம் ஃபிடல், லெனின், மாவோ தரப்பினர் கைப்பற்றினர். இங்கே நடந்திருப்பது அதுவல்ல. தேர்தல் மூலமான ஆட்சி மாற்றம். அங்கே சட்டத்தை மீறிய அதிகாரக் கைப்பற்றல் நடந்தது. இங்கே நடந்திருப்பது சட்டத்திற்குட்பட்ட அதிகாரத்தைப் பெறுதல். ஆகவே அங்கே சட்டத்தைக் கடந்து - மீறி புரட்சிகர ஆட்சியை நடத்த முடிந்தது. இங்கே சட்டத்துக் குட்பட்டே எதையும் செய்யலாம். அதற்கு மேல் எதிர் பார்க்கப்படும் மாற்றங்களைச் செய்ய வேண்டுமாயின் சட்டம் இயற்றப்பட வேண்டும். அல்லது சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் அதற்கான மக்கள் ஆணை தாராளமாகக் கிடைத்துள்ளது. தேவைப்படுவது அரசியற் துணிவும் விரிந்த சிந்தனையுமாகும். ஆக அநுரவும் NPP யும் மிக முக்கியமானதொரு வரலாற்றுச் சூழலில் தங்களைப் பொருத்திக் கொண்டுள்ளனர். மிக மோசமான நிலையிலிருக்கும் நாட்டை மீட்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர். இருண்ட யுகங்களிலிருந்து நாட்டை ஒளிமிக்க யுகத்துக்குக் கொண்டு செல்வதாக. அதாவது புதிய மீட்பர்களாக.


மக்களிடம் அதீத நம்பிக்கை உண்டு. இந்த அதீத நம்பிக்கை, எதிர்பார்ப்புகளைச் சாத்தியமாக்கவில்லை என்றால், அது மக்களுக்கு அதேயளவு ஏமாற்றத்தையும் கோபத்தையும் உண்டாக்கும் அபாயமுண்டு. ஆனால், எதிர்பார்க்கப்படும் அனைத்தையும் செய்யவே முடியாது. அந்த யதார்த்தத்தை NPP யும் அதனுடைய ஆதரவாளர்களும் மக்களுக்குச் சொல்ல வேண்டும். ஆனால், அதைச் சொல்லத் தயங்குகிறார்கள். அதேவேளை காலந்தாழ்த்தாமல் துணிகரமாகச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து விட வேண்டும். சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஸ, ரணில் - மைத்திரி போன்றோருக்கெல்லாம் வெவ்வேறு நிலையில் வெவ்வேறு வகையான வாய்ப்புகள் கிடைத்தன. அவர்கள் பிரச்சினையைத் தீர்க்காமல் நாறடித்தார்கள். அந்தத் தவறு இறுதியில் அவர்களையும் அவர்களுடைய அரசியலையும் அவர்களுடைய கட்சிகளையும் அழித்தே விட்டது.

குறித்து வைத்துக் கொள்ளுங்கள். NPP யும் இதே விளையாட்டை விளையாட முற்பட்டால் வரலாறு அதையும் விரைவில் குப்பைக்குள் தள்ளி விடும். வரலாறு அதற்கு அளித்த வாய்ப்பையும் - JVP நீண்ட காத்திருப்பு, நீண்ட பயணம் ஆகியவற்றுக்குப் பின் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தையும் அதுவாகவே பாழாக்கக் கூடாது.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284




# வைத்தியர் வரதராஜாவின் *Untold Truth Of Tamil Genocide* புத்தகம் ஆஸியில் வெளியீடு



முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் சர்வதேச சாட்சியாளரும், இறுதிப்போரில் இறுதி வரை களத்தில் பணியாற்றிய வைத்தியர்களில் ஒருவருமான வைத்தியர் வரதராஜாவின் Untold Truth Of Tamil Genocide என்ற புத்தகம் இம்மாத முற்பகுதியில் ஆஸ்திரேலியாவின் அடிலைட், சிட்னி, மெல்பேர்ண் ஆகிய நகரங்களில் வெளியிடப்பட்டது.

வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் வாழ்க்கை வரலாற்றை "தமிழினப்படு கொலையின் சொல்லப்படாத உண்மைகள்" என்ற நூல் தாங்கி வெளியாகியுள்ளது.

இந் நூல்வெளியீடு வைத்தியர் பெனடிட் தலைமையில் அடிலைட்டில் நடைபெற்றது.

இதேவேளை சிட்னி மற்றும் மெல்பேர்ணில் ஆஸ்திரேலிய தமிழர் பேரவை ((Australia Tamil Congress-ATC) இன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

முள்ளிவாய்கால் பகுதியில் வைத்தியர் துரைராஜா வரதராஜாவின் மேற்பார்வையில் பிரசவிக்கப்பட்ட குழந்தை , புலம்பெயர்ந்து தற்போது அடிலைட் நகரில் வசித்து வருகின்றார்.

வைத்தியரின் நூல்வெளியீட்டின் போது அவரது புகைப்படத்தை ஓவியமாக வரைந்து அவருக்கு கையளித்து நன்றி தெரிவித்தமை அனைவரினது மனதையும் நெகிழ வைத்தது.

அதுமட்டுமின்றி வைத்தியரின் உன்னத சேவைக்கு இதுவுமொரு சான்றாகும்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நூல் வெளியீட்டு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர்.


அடிலைட் வெளியீட்டில்...






மெல்பேர்ண் வெளியீட்டில்...





சிட்னி வெளியீட்டில்...









# நியாயமான ஆஸ்திரேலியா முன்னேறட்டும்

முதலில் இப்போதுள்ள சூழ்நிலைக்கு தகுந்த சிறுவர் நீதிக்கதை ஒன்றை சொல்லிவிட்டு மாண்புமிகு டோனி பர்க் விசயத்திற்கு வரலாம். நமக்கெல்லாம் கூடாரத்துக்குள் நுழைந்த ஒட்டகத்தின் கதை தெரியும் தானே. முன்னொரு காலத்தில் ஒரு வியாபாரி ஒட்டகத்தில் பயணம் செய்தான். இரவு நேரத்தில் தன் கூடாரத்தில் ஓய்வெடுத்தான். அவனது ஒட்டகம் வெளியே படுத்து இருந்தது. இரவு அதிக குளிர். அந்தக் குளிர் தாங்காமல் ஒட்டகம் கூடாரத்துக்குள் சிறிது மூக்கை உள்ளே நுழைத்தது. இவனும் “சரி மூக்கை மட்டும்தானே உள்ளே நுழைக்கிறது” என்று விட்டுவிட்டான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக முகம், கழுத்து, வயிறு என முற்றிலுமாக உள்ளே நுழைந்து படுத்துக் கொண்டது. இவனுக்கு இடம் போதாமல், ஒட்டகத்தை வெளியிலும் தள்ளமுடியாமல் இறுதியில் வியாபாரி வெளியே படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாம். இருக்க இடம் கொடுத்தால் படுக்க பாய் கேட்ட கதை தான்.

கடந்த நவம்பர் மாதம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் துரித கதியில் ஒரே அமர்வில் 30 சட்டங்கள் ஒருமனதாக நிறைவேறின. அவற்றில் மிக முக்கியமானதும், உலகளவில் ஆஸ்திரேலியாவிற்கு இருக்கும் கண்ணியமான பேருக்கு களங்கம் விளைவிப்பதுமான சட்டம் தான் குடியேற்றத் திருத்தச் சட்ட மசோதா. மேலும் இரண்டு குடியேற்றம் தொடர்பான சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன

இந்த குடியேற்றத் திருத்த வரைவுகளின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு :

1. மூன்றாம் நாடுகளுக்கு அதிகமான மக்களை அனுப்ப அரசாங்கத்திற்கு பூரண அனுமதி

2. புகலிடக் கோரிக்கை விடுத்த மக்களை நாடு கடத்தும் போது பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடரப்படுவதிலிருந்து அரசாங்கத்திற்கு விலக்கு அளித்தல்

3. நாட்டின் குடியுரிமை அல்லாதவர்களை குறிப்பிட்ட செயல்களை முடிக்க செய்யும் அல்லது அதற்கு இணங்காதவர்களை நாட்டினை விட்டும் அகற்றும் முழு அதிகாரம் குடியேற்ற அமைச்சகத்திற்கு வழங்குதல். இந்த வழிகாட்டுதலுக்கு இணங்காதவர்களுக்கு குறைந்தபட்சம் 12 மாதங்கள் அல்லது ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்கும் அதிகாரம்.

4. தடைசெய்யப்பட்ட பொருட்கள் குறித்தான மசோதாவானது, குடியேற்றக் காவலில் உள்ளவர்களுக்கு மொபைல் போன்கள் அல்லது போதை பொருட்கள் போன்ற ஆபத்தான பொருட்களை குடியேற்ற அதிகாரிகள் பறிமுதல் செய்ய அனுமதித்தல்.

## குடியேற்ற சட்ட திருத்த வரைவு (Migration amendment bill 2024):

கடந்த நவம்பர் 7 ஆம் திகதி ஆஸ்திரேலிய மத்திய உள்துறை அமைச்சர் டோனி பர்க் குடியேற்றத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார். இந்த வரைவானது குடியேற்ற தடுப்பு காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கு கால்விலங்கு அணிவித்தல் ,குடிமக்கள் அல்லாதவர்களை தடுப்புக்காவலில் வைத்தல் மற்றும் இம்மக்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கான கூடுதல் அதிகாரங்களை அரசுக்கு அளிக்கிறது.

இந்த வரைவின் முக்கியமான அம்சமானது, ஆஸ்திரேலியாவில் இருந்து குடிமக்கள் அல்லாதவர்களை மூன்றாம் நாடுகளுக்கு நாடு கடத்துவது, இவ்வாறாக நாடு கடத்தப்பட்ட மக்களை காவலில் தடுத்து வைக்க இந்த மூன்றாம் நாடுகளுக்கு பணம் செலுத்த ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்கு அங்கீகாரம் வழங்குகிறது. இதே போன்று புகலிடம் தேடி வரும் அகதிகளை, ருவாண்டா போன்ற மூன்றாம் நாடுகளுக்கு நாடு கடத்தும் சட்டம் கடந்த வருடம் ஐக்கிய அரசாங்கத்தில் (UK ) நிறைவேற்றியது ஞாபகம் வருகிறதா?.

இந்தச் சட்டத்தினால் 80,000 க்கும் மேற்பட்ட மக்கள் அகற்றப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதாவது பிரிட்ஜிங் விசாவில் உள்ள 4,452 பேர், குடியேற்ற மற்றும் சமூகநல தடுப்பு காவலில் சிறைப்படுத்தப்பட்டுள்ள 1,179 பேர் மற்றும் காலவரையற்ற குடியேற்ற தடுப்பு சட்டத்திற்கு புறம்பானது என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் காரணமாக விடுவிக்கப்பட் 246 பேர் இந்த சட்டத்தினால் உடனடியாகப் பாதிக்கப்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இந்த வரைவின்படி, அநியாயமாக குடியேற்றத் தடுப்புக் காவலால் பாதிக்கப்பட்ட எந்த நபரும் அரசாங்கத்திற்கு எதிராக வழக்கு தொடுக்க முடியாதபடிக்கு அரசாங்கத்திற்கு முழுவிலக்கு அளிக்கிறது.

நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது, எந்த மூன்றாம் நாடுகளுக்கு ஏதிலிகள் நாடு கடத்தப்படுவார்கள், அவர்களின் பாதுகாப்பினை ஆஸ்திரேலியா அரசாங்கம் எவ்வாறு உறுதி செய்யும், மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது குறித்தான எந்த வழிமுறைகளும் தெரிவிக்கப்படவில்லை. இந்த சட்டத்தை குறித்து அகதிகள் மனித உரிமைகள் சட்ட மையம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையர் மற்றும் ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம் போன்ற அனைத்து அமைப்புகளும் மிகுந்த அதிருப்தி தெரிவித்திருக்கின்றன. இந்தக் குடிவரவு சட்டத்திருத்த கொள்கை மாற்றங்கள் நமது முன்னாள் மற்றும் வருங்கால அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்பின் கொள்கைகளைப் பிரதிபலிக்கின்றன என்று வல்லுநர்கள் சொல்வதில் எந்த மிகையுமில்லை.

## தடை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான வரைவு :

குடியேற்ற தடுப்பு காவலில் உள்ள ஆஸ்திரேலிய குடிமக்கள் அல்லாதவர்களிடமிருந்து போதைப்பொருள் மற்றும் அலைபேசிகளை பறிமுதல் செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கும் மசோதா கடந்த மதம் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டத்தின்படி “தடுப்புக்காவலில் உள்ள ஒருவர் பயன்படுத்தும் ஏதேனும் ஒரு பொருள், ஏதாவது ஒரு பொருள் அந்த மையத்தில் வசிக்கும் மற்றவருக்கும் ஏதோ ஒரு வகையில் உடல் அல்லது மனநலம் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற சாத்தியம் இருக்குமாயின் அந்தப் பொருட்களை பறிமுதல் செய்யும் அதிகாரம் . முக்கியமாக அலைபேசிகள், போதை மற்றும் ஏதேனும் தீங்கு விளைவிக்கும் பொருட்கள். கைதிகள் அலைபேசிகளைக் கொண்டு மிகக் கடுமையான பாதுகாப்பு கட்டுப்பாடுகள் கொண்ட செயலிகள் மூலம் போதைப்பொருள் மாஃபியாவை சிறையில் இருந்து நடத்துகின்றனர். இதனால் ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பிற்கு மேலும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது என்று அமைச்சர் தெரிவித்தார்

இந்தச் சட்டமானது தனிமனிதனின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் எனவும், தடுப்புக்காவலில் இருக்கும் நபர் தனது வழக்குத் தொடர்பாக சட்ட ஆலோசனை பெறுவதற்கு தேவைப்படும் தகவல் தொடர்பு சாதனங்களைப் பறிப்பதால் கடும் மனம் அழுத்தத்துக்கு உள்ளாவார் என்று பல்வேறு சட்ட மற்றும் மனித உரிமை ஆணையங்கள் எதிர்ப்புக் குரல் தெரிவித்தன .

இந்த எதிர்ப்பினைத் தொடர்ந்து “கைதிகளின் அலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டால், அவர்கள் சட்ட ஆலோசனையைப் பெற மற்றும் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களைத் தொடர்புகொள்வதற்கு “மாற்றுத் தகவல் தொடர்பு வழிமுறைகள்” வழங்கப்படும் “ என்று அமைச்சர் தெரிவித்தார். ஆனால் இந்த மாற்றுத் தொடர்பு சாதனங்கள் எவ்வாறு செயல்படும், அரசாங்கம் இந்த சாதனங்களை உளவு செய்யாது என்ற உறுதி போன்ற எந்த தெளிவுகளையும் இந்த சட்டவரைவில் தெரியப்படுத்தவில்லை.

ஆனால் இந்தப் பழைமைவாத ,தீங்கு விளைவிக்கும் சட்ட திட்டங்களுக்கு எதிர்த்தரப்பான லிபரல் கூட்டணி முழு ஆதரவு வழங்கியதால் ஏகமனதோடு இந்த சட்ட வரைவானது நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

## நாடு கடத்தப்படும் அதிகாரம்



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

கடந்த 2024 மார்ச் மாதம் லேபர் அரசாங்கம் அறிமுகப் படுத்திய மசோதாவானது “குடிமக்கள் அல்லாதவர்களை அவர்களது சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புதல் அல்லது அதற்கு இணங்காதவர்களை அதிகபட்சம் 12 மாத சிறைத்தண்டனை அளிக்கவகைசெய்யும் அதிகாரத்தை” உள்ளடக்கியதாகும்.

குடிமக்கள் அல்லாதவர்களை “தங்கள் உடனடி மற்றும் சட்டப் பூர்வ அகற்றலை உறுதி செய்வதற்கான முயற்சிகளில் ஒத்துழைக்க வைத்தல்”, அதுமட்டுமின்றி இவ்வாறான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைக்காதவர்களை நாடுகடத்த தேவைப்படும் கூடுதல் அதிகாரங்களை அமைச்சகத்திற்கு இந்த மசோதா வழிவகை செய்கிறது.

அத்தோடு இவ்வாறு நாடுகடத்தப்படுவதை ஏற்காத நாடுகளின் விசாக்களை நிராகரிக்கும் அதிகாரத்தையும் இந்த வரைவு வழங்குகிறது. இந்த சட்டதிருத்தங்களைக் குறித்து பல்வேறு தரப்புகளிலிருந்து கடும் எதிர்ப்பு அளிக்கப்பட்டது. குறிப்பாக க்ரீன் கட்சியினர் இந்த சட்டமானது “டிரம்ப் பாணி பயணத் தடை” என்று தங்கள் அதிருப்தியை தெரிவித்தனர்.”

இந்த மசோதாவை தாமதப்படுத்தி மறு விசாரணைக்கு அனுப்புவதில் லிபரல் கூட்டணியும், க்ரீன் கட்சியும் முனைப்பு காட்டின. இந்த வரைவில் குழந்தைகள் மற்றும் புலம்பெயர் சமூகங்களின் நலன்களைக் கட்டாயமாகக் கருத்தில் கொள்வது உட்பட விரிவான திருத்தங்களை எதிர்க்கட்சிகள் பரிந்துரைத்தன.

இத்தகைய அனைத்து பரிந்துரைகளும் நிறைவேறவில்லை என்றாலும், ஏற்காத நாடுகளின் விசாக்களை நிராகரிக்கும் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துதை இன்னும் மூன்று வருடத்திற்கு தள்ளிபோடுவதில் எதிர்க்கட்சிகள் வென்றன.

கோவிட் தொற்றுக்காலத்திற்கு பிறகு ஏற்பட்ட உலகமெங்கும் ஏற்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வினை தீவிர வலதுசாரிகள் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் பொது எதிரியை உருவாக்குவதில் தொடர்ந்து வென்று வருகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு வந்தேறிகள் எனப்படும் புலம்பெயர்ந்தவர்கள், இஸ்லாமிய / யூத எதிர்ப்பு என வெவ்வேறு வெறுப்புகளை வளர்த்து ,மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகின்றனர். இதன் காரணமாகவே இவ்வாறான மனித உரிமைகளுக்கெதிரான இந்த சட்டங்களை ஆட்சியாளர்களால் எந்தவித எதிர்ப்புமின்றி நிறைவேற்ற முடிகிறது.

இந்தக் கட்டுரையை முடிப்பதற்கு இதை விட தகுந்த மேற்கோள் இல்லை. எழுத்தாளர் ஜெயமோகன் எழுதிய அறம் சிறுகதைத் தொகுப்பில் வரும் மிக முக்கியமான கதை “உலகம் யாவையும்” . இந்தக் கதையானது காரி டேவிஸ் எனும் உலகக் குடிமகன் எனும் கடவுசீட்டு கொண்டவரைப் பற்றியது. அந்தக் கதையில் காரி டேவிஸ் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. சபையின் பொதுக் குழு கூட்டத்தில் பார்வையாளராகச் சென்று துண்டுப்பிரசுரங்களை வீசியபடி எழுப்பிய கோஷம் என்னவென்றால் ‘உலகை பங்குபோடுவதை நிறுத்துங்கள். நாடு என்பது கொள்ளைக்காரர்கள் வகுத்த எல்லை அடையாளம். மனிதர்களை சேர்ந்து வாழ அனுமதியுங்கள். ஒரே உலகம், ஒரே மக்கள்! ’.

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI





# “பார் லைசன்ஸ்” உண்மை நிலைவரம் என்ன?

● ஆர்.சுகந்தன்

கடந்த மாதம் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத்தேர்தலின்போது தமிழ் தேசியத்தை மையப்படுத்தி இயங்கும் அரசியல் கட்சிகள் பாரிய வீழ்ச்சியை சந்தித்தன. தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த அதிருப்தியே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் எனச் சொல்லப்படுகின்றது. அதுவொரு காரணமாக இருப்பினும், இந்தத் திடீர் வீழ்ச்சிக்கு “பார் லைசன்ஸ்” விவகாரமும் முக்கியமான காரணம்.

### “பார் லைசன்ஸ்” விவகாரம் என்.பி.பி.யின் பரப்புரைச் சதி

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வாக்கு வங்கியானது தமிழ் தேசியத்துக்கு முதன்மையளிப்பது. தேசம், தேசியம், சுயநிர்ணயம் ஆகிய தமிழ் தேசியத்தின் உட்கூறுகளை தம் தேர்தல் அறிக்கைகளில் முன்வைப்பவர்களில் திறமையான வர்களுக்கே தமிழர்கள் வாக்களித்து வந்துள்ளனர். எனவேதான் நாடு முழுவதும் அனுர அலை அடித்து, அனுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டபோதிலும், வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தி கடைசிநிலைக்கு வந்தது. ஆனால் அதற்கு அடுத்து 54 நான்கு நாட்களில் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடமாகாணத்தை வெற்றிகொண்டது தேசிய மக்கள் சக்தி. இந்தத் திடீர் வெற்றியின் சூட்சுமம் என்ன?

பாரம்பரியமாகத் தமிழ் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்துப் பழக்கப்பட்ட மக்கள், அந்தக் கட்சிகள் மீது ஆயிரம் குறைகளைக் கண்டபோதிலும், பல விமர்சனங்களை முன்வைத்தபோதிலும், தேர்தலென்று வந்தால், அந்தக் கட்சிகளுக்கே வாக்களிப்பர். இந்த மனநிலையை உடைக்க வேண்டிய தேவை தேசிய மக்கள் சக்திக்கு இருந்தது. எனவே தமிழ் தேசியத்தை மையப்படுத்தி தேர்தல் அரசியல் செய்யும் கட்சிகளின் பலத்தை தமிழ் மக்களிடமிருந்து உடைக்கவேண்டும். அதற்கான ஒரு பரப்புரைப் பொருள் தேவை. அந்தப் பரப்புரைப் பொருளாகக் கிடைத்ததே “பார் லைசன்ஸ்” விவகாரம். எவ்விதத்திலும், ஆதாரங்களை வெளியிடமுடியாத, அதே நேரத்தில் தமிழ் மக்களை இலகுவாகக் கவரக்கூடிய இந்த விடயத்தை தேசிய மக்கள் சக்தி, சரியாகப் பயன்படுத்திக்கொண்டது. சமூக வலைத்தளங்களிலும், ஏனைய ஊடகங்களிலும், “பார் லைசன்ஸ்” விடயம் தொடர்ச்சியாக கொதிநிலைப் பிரச்சினையாக வைக்கப்பட்டது. எனவே இந்தப் பரப்புரையில் எடுபட்ட தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர். எனவே சரியாக - ஆதாரபூர்வமாக வெளியிட முடியாத “பார் லைசன்ஸ்” விவகாரத்தை முன்வைத்து, இரண்டு காரியங்களை சாதித்துக்கொண்டது தேசிய மக்கள் சக்தி. முதலாவது, இதுவரைகாலமும் வடக்கு வாழ் தமிழ் மக்கள் எதிர்த்து வந்த இனவாதக் கட்சியான ஜே.வி.பி.யை அந்தப்பிராந்தியத்தில் செல்வாக்குமிக்கதாக மாற்றியது, இரண்டாவது தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான தமிழ் மக்களின் விருப்பை சிதைத்தது.

### அவசரப்பட்ட விக்கினேஸ்வரன்

“பார் லைசன்ஸ்” விவகாரம் வெளிவந்தவுடனேயே முதல் ஆளாக ஊடகங்கள் முன்னால் தோன்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்கினேஸ்வரன், கிளிநொச்சியில் பெண் ஒருவர் “பார் லைசன்ஸ்” பெற தான் சிபாரிசு செய்ததை ஒப்புக்கொண்டார். போரினால் பாதிக்கப்பட்ட பெண்ணின் வாழ்வாதாரத்திற்காக அந்த சிபாரிசினை வழங்கியதாகவும் சொன்னார். “பார் லைசன்ஸ்” பெற சிபாரிசு செய்ததைவிட, அதற்காக அவர் சொன்ன காரணம் அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எவ்விதத்திலும் துரோகம் செய்யமாட்டார், பக்திமான், முன்னாள் நீதியரசர், நன்கு படித்தவர் எனத் தமிழ் மக்களால் நம்பப்பட்ட ஒருவரா இப்படி செய்தார் எனக் கொதிப்படைந்தனர் தமிழர். இந்தக் கொதிப்பினைத் தமிழ் மக்கள் வாக்களிப்பில் காட்டினர்.

### அவதானமெடுத்த சிறீதரன்

நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே “பார் லைசன்ஸ்” விவகாரம் கையிலெடுக்கப்படுகிறது என்பதையும், தன்னைத் தோற்கடிக்கவே தனது பெயர் இதில் இழுத்துவிடப்பட்டிருக்கிறது என்பதையும் உணர்ந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அனுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாகியவுடனேயே அவரை நேரில் சென்று சந்தித்தார். தமிழரசுக் கட்சியின் தலைவராக அல்லாமல், தனிப்பட்ட ரீதியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் என்ன பேசப்பட்டது என்பது யாருக்கும் தெரியாது. இந்தச் சந்திப்பில் “பார் லைசன்ஸ்” விடயத்தில் “ஏதோ டீல்” செய்திருக்கிறார் சிறீதரன் என்கிற விமர்சனங்கள் வரத்தொடங்க, ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவிக்கவே நேரில் சந்தித்தேன் எனவும், அது வழமையான சந்திப்பெனவும் அவர்சார்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனின் சமூக வலைத்தள ஆதரவாளர்கள் என வெளித்தெரியப்படுபவர்களால் சிறீதரன் “பார் லைசன்ஸ்” என்கிற விவகாரம் சமூகவலைத்தளங்களில் பேசுபொருளாக்கப்பட்டது. இது தனது எதிர்கால அரசியலுக்கு ஆபத்தாக மாறப்போகிறது என்பதை ஊகித்த சிறீதரன், உடனடியாகவே அவ்வாறு சமூகவலைத்தளங்களில் ஆதரமாற்ற குற்றச்சாட்டுக்களைப் பரப்பியவர்கள் மீதெல்லாம் தயவுதாட்சண்யமின்றி சட்டநடவடிக்கை எடுத்தார். அதில் கைதான சுமந்திரனின் ஆதரவாளர் ஒருவர் தனக்கு மனநோய் எனக் கடிதம் கொடுத்தே அந்த சட்ட நடவடிக்கையிலிருந்து தப்பிக்கவேண்டியேற்பட்டது. இவ்வாறு தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்த ஆதாரங்களை வெளியிடமுடியாத குற்றச்சாட்டுக்களை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவதானத்துடன் கையாளவிட்டிருந்தால், இப்போது அவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவே இருந்திருக்க முடியும்.





### சொன்னதை செய்யாத தேசிய மக்கள் சக்தி

தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கும்போது “பார் லைசன்ஸ்” விவகாரத்தைக் கையிலெடுத்த தேசிய மக்கள் சக்தியினர், எந்தெந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்கிற உண்மையை வெளியிடப்போவதாகக் கூறினர். உண்மையில் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டிருந்த பலர் தேர்தலிலிருந்து ஒதுங்கிக்கொண்டனர். சிலர் உண்மையைப் பொது வெளியில் ஒப்புக்கொண்டனர். அப்படியனாவர்கள் மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஒருவர் தான் நினைத்தால், நாடாளுமன்றத்தின் அனுமதியின்றியே “பார் லைசன்ஸ்” பெற்றவர்களின் விபரத்தையும், அதற்காக சிபாரிசு செய்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்களையும் வெளியிட்டிருக்க முடியும். ஊடகங்களுக்கும் அந்தத் தகவலைக் கசியவிட்டிருக்க முடியும். ஆனால் ஆரம்பத்தில் 'நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாகவே பார் லைசன்ஸ்” பெற்றவர்களின் விபரத்தை வெளியிடுவோம்' எனக்கூறிவந்த தேசியமக்கள் சக்தி, திடீரென அதிலிருந்து குத்துக்கரணம் அடித்துப் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரே வெளியிடுவோம் என்றது. எனவே இந்த உண்மையை அறிவதற்கு ஆர்வப்பட்டவர்களும் தேசிய மக்கள் சக்தி வாக்களித்தனர். இவ்வாறு பார் லைசன்ஸ்” விவகாரத்தை வைத்து வாக்குகளைப் பெற்றுக்கொண்டு, அரசாங்கத்தையும் அதிக பெரும்பான்மையுடன் அமைத்த தேசிய மக்கள் சக்தி,’ பார் லைசன்ஸ்’விடயத்தில் தான் கொடுத்த வாக்கை தேர்தலுக்குப் பின்னரும் செயலில் காட்ட பின்னடித்தது.

நாடாளுமன்ற அமர்வுகளிலும், ஊடகங்களிலும் இதுகுறித்த விமர்சனங்கள் பரவலாக எழுந்த பின்பே, தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் புதிதாக 'பார் லைசன்ஸ்'பெற்ற 372 பேரின் பெயர் விபரங்களை வெளியிட்டார். நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட இந்த பெயர் விபரத்தை சாதாரணர் ஒருவர் மதுவரித்திணைக்களத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக விண்ணப்பித்தாலே பெற்றுக்கொள்ள முடியும். எனவே மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை. மக்களும், ஊடகங்களும் எதிர்பார்த்ததெல்லாம், இந்த பார் லைசன்ஸை” உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ள சிபாரிசு கடிதங்களை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பதை வெளிப்படுத்துவார்கள் என்பதையே. அரசாங்கம் வெளியிட்டிருக்கின்ற ஆதாரங்களின்படி, கிளிநொச்சி மாவட்டத்திற்கு 16 “பார் லைசன்ஸ்” வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தவிர புதிதாக எதுவுமில்லை. எனவே இந்த “பார் லைசன்ஸ்” விடயம் குறித்த உண்மையையே வெளியிட முடியாத இந்த அரசாங்கம், நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஊழல் விடயங்களை எப்படி வெளியிடப்போகிறது என்கிற சந்தேகமும் வலுக்கிறது. “பார் லைசன்ஸ்” விவகாரத்தையும், ஊழலையும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான பரப்புரை உத்தியாக மாத்திரமே தேசிய மக்கள் பயன்படுத்தி வந்துள்ளது என்கிற உண்மையையும் இந்த “பார் லைசன்ஸ்” விவகாரம் வெளிப்படுத்தியுள்ளதாக நோக்கர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். ■

# அகம், புறம், சங்க(ம)ம்

## யாண்டுபலவாகியும் நரையிலன் ஆகுதல்





ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

சமீபத்தில் பிரபல தமிழ் எழுத்தாளர் ஒருவரின் வலைத்தளத்தில் எழுத்தாளர் சுஜாதா பற்றி மிக மோசமான விமர்சனக் கட்டுரை வெளியாகியிருந்தது. அதில் சுஜாதா வெறும் பத்தி எழுத்தாளர் எனவும், அவரைப் போன்று எவரும் எழுதிவிடலாம் எனவும், அவரது ஆராதகர்கள் அனைவரும் 50 வயதிற்கு முற்பட்ட முதியவர்கள் எனவும், சினிமாவில் மீடியா ட்ரீம்ஸ் நிறுவனத்தின் மிகப்பெரிய தோல்விக்கு காரணம் சுஜாதா எனவும் சேற்றினை அந்த எழுத்தாளர் வாரியிறைத்திருந்தார். இந்த விமர்சனத்தை படித்து நொந்து போன நான், எனது எழுத்தாள நண்பர் ஒருவரிடம் கேட்ட பொழுது , "சுஜாதா என்றும் இருப்பார், அந்த மோசமான விமர்சகர் காலப்புழுதியில் கரைந்து போவார்" என்றும் கூறினார். அது எந்த அளவுக்கு முற்றிலும் உண்மை என்பது சுஜாதாவின் கேள்வி பதில்கள் தொகுப்பினை படித்துக்கொண்டிருந்த பொழுது எனக்கு புரிந்தது. அந்தக் கேள்வி பதில் இதுதான் -

**கேள்வி: சுஜாதாவின் (ரங்கராஜன் இல்லை ஸார்!) இளமையின் ரகசியம் என்ன ?**

**சுஜாதா :** யாண்டுபலவாகியும் நரையிலன் ஆகுதல் மீண்டும் மீண்டும் dye அடித்துக்கொள்வதால்.

இந்தப் பதிலில் ஊடாடும் அங்கதமும் ,இதன் பின்னே அடங்கியிருக்கும் சுஜாதாவினுடைய ஆழமான சங்க இலக்கியங்களின் மேலுள்ள புலமையும் நமக்கு விளங்கும். இதைப்படித்த பிறகு பிசிராந்தையார் எழுதிய இந்த புறநானூற்றுக் கவிதையை தேடிப் படித்த பிறகு வாத்தியாரின் பாண்டித்தியத்தை மேலும் அறிந்து கொள்ள முடிந்தது.

பிசிராந்தையார் யார் என்று நம் அனைவருக்கும் தெரியும் தானே. பாண்டிய நாட்டில் பிறந்த பிசிராந்தையார் சோழ மன்னன் கோப்பெருஞ்சோழன் மேல் கொண்ட மதிப்பின் காரணமாக அவனைப் பற்றி நிறையப் பாடல்களைப் பாடியுள்ளார். ஆனால் இவர்களிருவரும் ஒருவரையொருவர் சந்தித்தது கிடையாது. பார்க்காமல் ,பேசிக்கொள்ளாமல் நட்பு கொள்ளுதல் சங்ககாலத்தில் சாத்தியாமாக இருந்திருக்கிறது. இப்பொழுதெல்லாம் தேவைக்கு மட்டுமே நட்பு என்று சுருங்கிவிட்டதை நினைத்தால் வருத்தம் தான். கோப்பெருஞ் சோழன் தன் புதல்வர்களின் சுயநலம் கண்டு நொந்து வடக்கிருந்து (வடக்கு திசை நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து ) உயிர்துறக்க நினைத்த பொழுது , 'எனது நண்பன் பிசிராந்தையார் என்னைக் காண எப்படியும் வருவார். ஆதலால் அவருக்கும் எனதருகில் வடக்கிருப்பதற்கு இடம் ஏற்பாடு செய்க' என்று பணித்திருந்தான். அவன் நினைத்தது போலவே பிசிராந்தையாரும் வருகை புரிந்து அவனுடன் உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்தார் என்பது பழங்கதை.

*"யாண்டுபல வாக நரையில ஆகுதல்*
*யாங்கு ஆகியர்?" என வினவுதிர் ஆயின்,*
*மாண்டஎன் மனைவியோடு மக்களும் நிரம்பினர்*
*யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை,*
*ஆன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.*

- புறநானூறு, பாடல்191

பாடியவர்: பிசிராந்தையர்

பாடலின் பின்னணி: எப்படி இவ்வளவு வயதாகியும் சிறிதும் நரையின்றி இளமையாகவும் இருப்பதற்குரிய ரகசியம் என்ன என்று மக்கள் கேட்டபொழுது, அதற்கான காரணங்களை இப்பாடலில் பிசிராந்தையார் தொகுத்துக் கூறுகிறார்.

திணை: பொதுவியல். எல்லாத் திணைகளுக்கும் பொதுவான செய்திகளை கூறும் பாடல்களை அடக்கியது பொதுவியல் திணை.

துறை: பொருண்மொழிக் காஞ்சி. இம்மண்ணில் வாழும் உயிர்களுக்கு உத்திரவாதம் அளிக்க கூடும் என்று நம்பப்படும் பிறப்பு ,மறுபிறப்பு தொடர்பான கடன்களை எடுத்துக் கூறுதல்.

பாடலின் பொருள் :

ஆண்டுகள் பல கடந்து வயதாகி மூப்பெய்தினாலும், தலையில் நரைமுடிகள் இன்றி அதாவது என்றும் இளமையாக இருப்பதற்கான காரணங்கள் அல்லது ரகசியம் என்ன? என்று என்னிடம் கேட்டீர்கள் என்றால் (யாண்டு பலவாக நரையில வாகுதல் யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்). "மேன்மை குணநலன்கள் பொருந்திய மனைவி (மாண்டஎன் மனைவியோடு) கிடைக்கப்பெற்றேன். அறிவு, பண்பு, அடக்கம் முதலான சிறந்த குணநலன்கள் நிரம்பிய பிள்ளைகளுக்கு தந்தையாகும் நல்வாய்ப்பு பெற்றேன் (மக்களும் நிரம்பினர்). என் எண்ணம் போல் ஒழுக்கம் தவறாது நடக்கும் உற்றார் மற்றும் சுற்றம் பெற்றேன் (யான்கண்டனையர் என் இளையரும்). ஒரு நாளும் மக்களுக்கு தீங்கு செய்யாமல் நல்லாட்சி நடத்தும் மன்னனும் எனக்கு கிடைத்தார் (வேந்தனும் அல்லவை செய்யான்). அது மட்டுமின்றி அறிவு, அன்பு, அடக்கம் முதலான நற்பண்புகள் வாய்க்கப் பெற்றதோடு அனுபவத்திலும் முதிர்ச்சியடைந்து, கொண்ட கொள்கையில் சிறிதும் தவறாமல், நீதிநெறி வழுவாமல் வாழும் சான்றோர்கள் பலர் வாழும் ஊரில் பிறந்து வாழும் மாபெரும் வரம் பெற்றவன் நான். (அதன் தலை ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்சான்றோர் பலர் யான் வாழும் ஊரே?) . இப்படிப்பட்ட ஊரில் வாழும் எனக்கு எவ்வாறு நரை விழுந்து முதுமை தோன்றும் ?என்று கேட்கிறார்

இந்தப் பாடலை நன்றாகக் கவனித்தோம் என்றால் இளமையாக இருப்பதற்கான ரகசியம் என்னவென்று தோன்றும். இளமையாக இருக்க என்ன செய்யவேண்டும்? எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். ஒருவன் எப்பொழுது



மகிழ்ச்சியாக இருப்பான்? எந்தவொரு கவலையும், துக்கமும், மன அழுத்தமின்றி இருப்பவனே மகிழ்ச்சியாக இருக்க முடியும். இந்த மகிழ்ச்சிக்கு தடையாக, மனஅழுத்தம் தரக்கூடிய காரணிகள் என்னவென்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பிசிராந்தையார் கச்சிதமாக கண்டித்திருக்கிறார். அதாவது மனைவி / கணவன், குழந்தைகள், உறவினர்கள் , அரசாங்கம் / மன்னன் (ஆட்சி புரிபவர்கள்), நல்லெண்ணம் பெற்ற சமூகம். இந்தக் காரணிகள் எல்லாம் பொருந்தி அமைவது இயலாத காரியம். ஆதலால் கூடுமானவரை சகித்துக் கொண்டு, இனியவற்றை மட்டுமே கண்டு, நல் இயல்புடன் என்றும் நடந்தால் என்றும் இளமையாக இருக்க முடியும் என்கிறார். ஆதலால் மோடி ஆண்டாலும், அல்பானீஸ் ஆண்டாலும் எனக்கொரு கவலை இல்லை என்றிருத்தல் சாலச்சிறந்தது.



# யூத எதிர்ப்பலையால் ஆஸிக்கு தலையிடி

● நேஹா

கூட்டாட்சி நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஆஸ்திரேலியாவில் யூத எதிர்ப்பு அலை அதிகரித்துள்ளமை ஆளும் லேபர் கட்சிக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

இந்த யூத எதிர்ப்புப் போக்கை ஒரு அஸ்திரமாக பயன்படுத்தி லேபர் கட்சிமீது பிரதான எதிர்க்கட்சியான லிபரல் கட்சி சரமாரியாக சொற்கணைகளைத் தொடுத்து வருகின்றது. இந்நிலையில் மெல்பேர்ணிலுள்ள யூத வழிபாட்டுத்தலம் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல் இராஜதந்திர மோதலுக்கும் வழிவகுத்துள்ளது எனலாம்.

### நடந்தது என்ன?

மெல்பேர்ண் தென்கிழக்கு பகுதியிலுள்ள யூத வழிபாட்டு தலம்மீது டிசம்பர் 6 ஆம் திகதி அதிகாலை தீ வைப்பு தாக்குதல் நடத்தப்பட்டது.

இனந்தெரியாத நபர்கள் இருவரே தீ பரவக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தி இந்த நாசகார செயலில் ஈடுபட்டனர். இதனையடுத்து தீ கொளுந்துவிட்டெரியத் தொடங்கியது.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கும், தீயணைப்பு பிரிவினருக்கும் உடன் தகவல் வழங்கப்பட்டது. 10 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களும், தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

எனினும், தீ வேகமாக பரவி மூன்று மாடிகளைக்கொண்ட வழிபாட்டு தலத்தில் இரு கட்டடங்கள் தீக்கிரையாகின. கடும் போராட்டத்துக்கு மத்தியில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்து சம்பவத்தில் ஒருவருக்கு மாத்திரமே சிறு காயம் ஏற்பட்டுள்ளது. பெருமளவு உடைமைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

### ஐ.நா. தீர்மானமும் தீ வைப்பு தாக்குதலும்

பாலஸ்தீனத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும் என வலியுறுத்தும் தீர்மானத்துக்கு டிசம்பர் 05 ஆம் திகதி ஐ.நா.வில் ஆஸ்திரேலியா ஆதரவாக வாக்களித்திருந்தது.

குறித்த தீர்மானம் யூத எதிர்ப்பு நடவடிக்கையாகும் எனவும், இதனை ஆஸ்திரேலியா ஆதரித்தமை கவலையளிக்கின்றது எனவும் இஸ்ரேல் பிரதமர் விசேட அறிக்கையொன்றின் ஊடாக சுட்டிக்காட்டி இருந்தார்.

அத்துடன், ஆஸ்திரேலியாவின் இந்த தீர்மானம் யூத எதிர்ப்பைத் தூண்டும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இஸ்ரேல் பிரதமர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்து 24 மணி நேரம் செல்வதற்குள் மெல்பேர்ணில் யூத வழிபாட்டு தலம்மீது தீ வைப்புத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச்சம்பவம் இஸ்ரேலை மேலும் கொதிப்படைய வைத்தது.

ஆஸ்திரேலியாவில் வாழும் யூத சமூகத்தினர் மத்தியிலும் ஆழ்ந்த கவலையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது.

### இஸ்ரேல் சீற்றமும் ஆஸியின் பதிலடியும்

இந்தச்சம்பவத்தையடுத்து இஸ்ரேல் பிரதமரால் காட்டமானதொரு அறிக்கை வெளியிடப்பட்டது. அது ஆஸ்திரேலியா மீது இஸ்ரேலின் அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது.

குறிப்பாக மெல்பேர்ணில் யூத வழிபாட்டுதலம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும், ஐ.நா.வில் ஆஸ்திரேலியா வாக்களித்த விதத்தையும் தொடர்புபடுத்தி இஸ்ரேல் பிரதமர் வெளியிட்டுள்ள கருத்து இராஜதந்திர வட்டாரத்திலும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

யூத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆஸ்திரேலியா முடிவு கட்ட வேண்டும் எனவும் அவர் இடித்துரைத்திருந்தார். எனினும், இஸ்ரேல் பிரதமரின் குற்றச்சாட்டை ஆஸ்திரேலியா நிராகரித்தது. ஐ.நா. தீர்மானம் தொடர்பில் ஆஸ்திரேலியா எடுத்த முடிவுக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை என பதிலளிக்கப்பட்டது.

### உச்சக்கட்ட பாதுகாப்பு


மேற்படி தீ வைப்பு தாக்குதல் சம்பவத்தையடுத்து விக்டோரியா மற்றும் நியூ சவூத் வேல்ஸ் மாநிலங்களில் யூத வழிபாட்டு தலங்கள் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அத்துடன் பொலிஸாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



யூத வழிபாட்டு தலம்மீதான தீ வைப்பு தாக்குதலை பிரதமர் அல்பானீஸி வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருந்தார். இது பயங்கரவாத தாக்குதல் சம்பவம் என்ற தகவலையும் வெளியிட்டிருந்தார்.

மறுநாள் காலை இது பயங்கரவாத தாக்குதல் என்பதை பெரடல் பொலிஸார் உறுதிப்படுத்தினர். அத்துடன், விக்டோரியா பொலிஸார் மற்றும் பெரடல் பொலிஸார் இணைந்து இது சம்பந்தமாக ஆராய்ந்தனர்.

தற்போது கூட்டு பயங்கரவாத குழு ஊடாக சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல புலனாய்வுப் பிரிவும் தனி விசாரணையை



முன்னெடுத்து வருகின்றது.

### விசேட செயலணி ஸ்தாபிப்பு

மேற்படி விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும், யூத எதிர்ப்புச் சம்பவங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவும், அத்தகைய சம்பவங்களை எதிர்த்து போராடவும் விசேட செயலணி நிறுவப்பட்டுள்ளது.

மாநில பொலிஸார், பெடரல் பொலிஸாருடன் மேற்படி விசேட செயலணி இணைந்து பணியாற்றவுள்ளது.

### வழிபாட்டு தலம் நோக்கி படையெடுப்பு

தீ வைப்புத் தாக்குதலுக்கு இலக்கான யூத வழிபாட்டுத் தலத்துக்கு ஆஸ்திரேலியாவுக்கான இஸ்ரேல் தூதுவர் அமீர் மைமன், டிசம்பர் 10 ஆம் திகதி பயணம் மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட அவர், யூத சமூகத்தினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

குறித்த பயங்கரவாதச் செயல் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளது எனவும் அவர் கூறி இருந்தார். அதேபோல ஆஸ்திரேலியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் இஸ்ரேல் கழுகுப்பார்வையை செலுத்தியுள்ளது.

அதே நாளில் பிரதமர் அந்தோனி அல்பானீஸியும் வழிபாட்டு தலத்துக்கு சென்றிருந்தார். யூத சமூகத்தினருடன் விரிவான கலந்துரையாடலையும் நடத்தினார்.

தாக்குதலுக்கு இலக்கான வழிபாட்டு தலத்தை மீளக்கட்டியெழுப்புவதற்குரிய நிதி வழங்கப்படும் எனக் கூறியதுடன், ஆஸ்திரேலியாவில் யூத எதிர்ப்பு நடவடிக்கைக்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் உறுதியளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டனும் சென்றிருந்தார். தாம் ஆட்சிக்கு வந்தால் யூத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முடிவு கட்ட சிறப்பு செயலணி ஸ்தாபிக்கப்படும் என யூதர்களிடம் அவர் உறுதியளித்தார்.

### மீண்டும் தாக்குதல்

யூத வழிபாட்டு தலம்மீதான தாக்குதல் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருந்த நிலையில் டிசம்பர் 11 ஆம் திகதி காலையும் யூத எதிர்ப்புச் சம்பவமொன்று பதிவானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சிட்னி புறநகர் பகுதியில் இஸ்ரேலுக்கு எதிரான கோஷங்கள் பொதுவெளியில் எழுதப்பட்டிருந்தன.

'கில் இஸ்ரேல்" என்ற சொற்பதம் எழுத்துப் பிழையுடன் எழுதப்பட்டிருந்தது. அத்துடன், திருடப்பட்ட காரொன்று மேக்னி தெருவில் தீ வைத்து கொளுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு எதிராக கடும்நடவடிக்கை எடுக்கப்படும்என்று மாநில பிரீமியர் எச்சரிக்கை விடுத்திருந்தார். இச்சம்பவங்கள் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வழிபாட்டு தலங்களுக்கு முன்னால் போராடத் தடை

இவ்வாறானதொரு பின்புலத்தில் வழிபாட்டு தலங்களுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தப்படுவதற்கு தடை விதிக்கும் யோசனையை கூட்டாட்சி அரசாங்கம் ஆதரித்துள்ளது.

குறித்த தடை யோசனை நியூ சவூத் வேல்ஸ் பிரீமியரால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்ட திருத்தம் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

யூத வழிபாட்டுத் தலம்மீது தீ வைப்பு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையிலேயே மேற்படி தடை யோசனையும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்நிலையில் எந்த வழிபாட்டு தலங்களுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுவதை தடுக்கும் யோசனையை தான் ஆதரிப்பதாக பிரதமர் அந்தோனி அல்பானீஸி அறிவித்துள்ளார்.

அதேபோல யூத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களின் விசாக்களை இரத்து செய்வதற்குரிய ஏற்பாடுகள் பற்றியும் அவதானம் செலுத்தப்படவுள்ளது. ■

# மாதராசிபலன்



## மேடம்

மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு டிசம்பர் மாதத்தில் ஆற்றல் பெருகும். எந்த ஒரு செயலிலும் ஊக்கத்துடன் செயற்படுவீர்கள். சவாலான சூழல் இருந்தாலும் அதைச் சமாளித்து உங்களின் இலக்குகளை சிறப்பாக அடைவீர்கள். இந்த மாதத்தில் அனுபவம் இல்லாதவர்கள் நெருப்பு, இரசாயனம், மின்சாரம் போன்ற ஆபத்தான வேலைகளில் ஈடுபட வேண்டாம். உங்கள் வேலையில் கடின உழைப்பு தேவைப்படும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## இடபம்

ரிஷப ராசியைச் சேர்ந்தவர்கள் உடல் ஆரோக்கியம் மற்றும் மன ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். கடந்த காலத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். இந்த மாதத்தில் உங்கள் உடல் நலனிலும், உணவு விஷயத்திலும் கவனம் செலுத்தவும். மனநலனைப் பராமரிப்பதற்கு தியானம், யோகா போன்றவற்றைச் செய்யவும். உங்கள் பணத்தை சரியான வழியில் செலவிடுவதும், வீண் செலவுகளைக் கட்டுப்படுத்துவதும் அவசியம்.

## மிதுனம்

மிதுன ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இந்த மாதம் மன சோர்வு அதிகரிக்கும். குடும்பத்தில் அல்லது பணியிடத்தில் சில விஷயங்களும் உங்களுக்கு மன அழுத்தத்தை தரக்கூடியதாக அமையும். ஆரோக்கியம் முன்னேற்றம் அடையும். இருப்பினும் இந்த மாதத்தில் சரியான அளவில் தூக்கமும், உணவு எடுத்துக் கொள்வதும் நல்லது. ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பை கடைப்பிடிக்க வேண்டிய மாதம். குடும்ப உறவு மேம்படும்.

## கடகம்

கடக ராசி அன்பர்களுக்கு டிசம்பர் மாதம் உடலளவில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். உங்களின் செயலில் புதிய ஆற்றலுடனும், ஊக்கத்துடனும் செயற்படுவீர்கள். நிதிநிலை மேம்படும். உணவு விஷயத்தில் அக்கறை காட்டவும். அன்புக்குரியவர்களுடன் நேரத்தைச் செலவிட வாய்ப்பு கிடைக்கும். உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைப் பராமரிக்கவும்.

## சிம்மம்

சிம்ம ராசியில் பிறந்தவர்கள் உடல் அளவில் ஆற்றல் குறைவாக உணர்வீர்கள். பணியிடத்தில் கடினமான சூழல் இருக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு சளி அல்லது காய்ச்சல் தொடர்பான பிரச்சினைகள் சந்திக்க நேரிடும். சரியான ஓய்வு மட்டும் எடுப்பது நல்லது. கோபத்தைக் கட்டுப்படுத்தி, பொறுமையுடன் செயற்படவும்.

## கன்னி

கன்னி ராசி காரர்களுக்கு டிசம்பர் மாதம் சிறப்பான காலமாக இருக்கும். உங்கள் ஆரோக்கியம் மேம்படும். எந்த ஒரு செயலிலும் சிறப்பான ஆற்றலுடன் செயற்படுவீர்கள். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பிறருடன் அணுகுமுறை நன்றாக இருக்கும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். மன ஆரோக்கியத்தில் கவனமும், உங்கள் மனதை கட்டுப்படுத்த வேண்டிய மாதம்.

## துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு கலவையான பலன் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை தேவை. உங்கள் நிதி நிலையில் சிரமத்தை சந்திக்க வாய்ப்புள்ளது. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்பத்திலும், நண்பர்களுடனும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். பிள்ளைகளின் கல்வி தொடர்பான கவலை ஏற்படும். பணியிடத்தில் சிலருக்கு இடம் மாற்றம் ஏற்படும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு இந்த மாதம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். உங்களின் உடல் நலம் தொடர்பான விஷயங்களில் அக்கறை தேவை. உழைக்கும் வர்க்கத்தினருக்கு முன்னேற்றம் கிடைக்கும். பணியிடத்தில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் புதிய யோசனையுடன் செயற்பட இலக்குகளை எளிதில் அடைவீர்கள். புதிய வேலை தொடங்குதல், புதிய வேலைக்கான முயற்சியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். எதிர்காலம் தொடர்பான முதலீடு தொடர்பான விஷயத்தில் லாபமான சூழல் இருக்கும்.

## தனுசு

தனுசு ராசியினருக்கு இந்த மாதம் சுப நிகழ்வுகளும், மகிழ்ச்சியான சூழலும் இருக்கும். பொருளாதார ரீதியாக முன்னேற்றம் அடைவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.சமூகப்பணி, அரசியலில் உள்ளவர்களுக்கு மரியாதை அதிகரிக்கும். உங்கள் பேச்சில் இனிமையைக் கடைப்பிடித்தால் பல வருடத்தில் நன்மை அடைய முடியும். குடும்பத்தில் உள்ள பழைய சச்சரவுகள் நீங்க இணக்கமான சூழல் ஏற்படும்.

## மகரம்

மகர ராசியினருக்கு டிசம்பர் மாதத்தில் உடல்நலம் தொடர்பான பிரச்சினைகளில் கவனம் தேவை. குடும்பத்தில் வாக்குவாதம், தகராறு ஏற்படும். உங்கள் பேச்சில் கட்டுப்பாடு அவசியம். கெட்ட சமூகத்தில் இருந்து விலகி இருக்கவும். சமூகத்தில் நற்பெயர் அதிகரிக்கும். உங்கள் வேலைகளில் சரியான திட்டமிடல் அவசியம் இல்லை எனில் இலக்கை அடைவதில் சிரமம் ஏற்படும். பணியிடத்தில் பிறரின் வேலையில் தலையிட வேண்டாம். எந்த வித சச்சரவுகளிலும் ஈடுபடாமல் இருப்பது நல்லது.

## கும்பம்

கும்ப ராசியினருக்கு டிசம்பர் மாதம் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். குறிப்பாக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். குடும்பத்தில் சுற்றுத் தொடர்பான மனக்கசப்புகள் இருக்கும். பணியிடத்தில் எதிரிகள் விஷயத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இந்த மாதத்தில் உங்களின் செயலில் வெற்றி பெற கடின உழைப்பு தேவைப்படும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். முதலீடு விஷயத்தில் கவனம் தேவை.

## மீனம்

மீன ராசியினருக்கு இந்த மாதத்தில் சமூக மற்றும் அரசியல் துறையில் உள்ளவர்களுக்கு மரியாதை அதிகரிக்கும். உழைக்கும் வர்க்கத்தினருக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வாக்குவாதங்கள் ஏற்படும். பிறரை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம். இந்த மாதம் கடன் தொடர்பான மன உளைச்சல் ஏற்படும். ஆன்மீகப் பயணங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மனைவி, பிள்ளைகளுடன் கருத்து வேறுபாடு அதிகரிக்கும். இந்த மாதத்தில் சண்டை சச்சரவுகளில் இருந்து விலகி இருப்பது நல்லது.


VICTORIA
Tamil Heritage Month
தமிழர் திருநாள்
Tamil Festival Australia
FREE ENTRY
தமிழர் திருநாள்
ஆஸ்திரேலியா 2025
THE TAMIL FESTIVAL
AUSTRALIA
18 JANUARY 2025 | SATURDAY
8:30 AM ONWARDS
CAULFIELD RACECOURSE,
CAULFIELD EAST,
VIC 3145
THE GRAND THAI PONGAL CELEBRATION
OF THE TAMIL VICTORIANS
Tamil Victorians & Multiple Tamil Community Organizations Celebrating
A FESTIVAL FOR EVERYONE
www.tamilfestival.org.au
vanakkam@tamilfestival.org.au

Transsco™ CARGO

=

#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA

ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP

We love to deliver

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255

45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228

SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002

1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU